Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C/706)
SPICE TRAVELS & TOURS (PVT) LTD
IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | வைகாசி 16 | திங்கட்கிழமை | (30.05.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 243


சேவைக்கு கௌரவம் 05


ஐரோப்பிய சாம்பியன் கிண்ணம் யாருக்கு? 07


சேவல் என்றால் சும்மாவா? 11


துண்டு மாற்றுகிறார் கலைஞர் 12

# அழுத்தங்களை எதிர்கொள்ள புதிய வியூகம் வகுக்கிறது அரசு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் அமெரிக்காவின் அழுத்தமும், இந்திய அரசு விதித்திருக்கும் நிபந்தனைகளும் இலங்கை அரசுக்கு பெரும் இராஜதந்திர நெருக்கடிகளை உருவாக்கியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி இரு நாடுகளையும் இராஜ தந்திர ரீதியில் கையாளுவது இலங்கை அரசுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் முன்வைத்துள்ள நிபந்தனைகள் மற்றும் திட்டங்களை பின்பற்றுவது தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை.

கடந்த நாட்களில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் ரொபேட் ஓ பிளேக், இலங்கை பின்பற்ற வேண்டிய சில நிபந்தனைகளை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அமெரிக்காவின் இலங்கை தூதுவர் பெட்ரிகா புட்டினிஸ் ஊடாக, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் வலியுறுத்தப்பட்டது.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு தொடர இந்த நிபந்தனைகளைக் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர்கள் 10 பேர் கைது இந்திய காவல் படை நடவடிக்கை

(கொழும்பு)


இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்திய கரையோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்மீனவர்களின் இரு படகுகளும் இந்திய கரையோர காவல் படையனரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பி.ரி.ஐ. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

காகிநாடாவிலிருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து சேஜனா, களுபுதா ஆகிய இப்படகுகள் சுமார் 5000 கிலோ மீன்களுடன் கைப்பற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பொலிஸாரிடம் ஒப்படைப் பதற்காக இப்படகுகள் காகிநாடா துறை முகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள் ளன. இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட 8 ஆவது கைது நடவடிக்கை இதுவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச அழுத்தம் வரமுன்னர் அதிகாரப் பகிர்வை வழங்குங்கள்



### ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேசத்திலிருந்து அதிகாரப் பரவலாக்கல் தொடர்பிலான அழுத்தங்கள் வரமுன்பதாகவே தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை வழங்குமாறு ஐ.தே.க.வின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் இந்தியத் தலையீட்டின் மூலம் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் அலகாக மாகாண சபையை உருவாக்கிய 13 ஆவது திருத்தச் சட்டமூலம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலிகளுக்கு வாழ்வாதாரம் புதிய கடன் திட்டம் யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் மற்றும் கடந்த கால போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடன் திட்டம் நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களென ஆயிரம் பேருக்கு இலகு கடன் திட்டத்திற்கான காசோலைகளை அமைச்சர் வழங்கி வைத்தார்.

நேற்றைய இந்த நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் (15 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். நகரில் தீ; திடீரென பரவியது

(கொழும்பு)

யாழ்.நகரிலுள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் திடீரென்று காஸ் சிலிண்டர் ஒன்று தீ பிடித்து எரிந்ததால் பெறுமதியான பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று மதியம் 1 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தனியார் வர்த்தக நிலையமொன்றிலேயே இவ்வாறு தீ பிடித்துக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் வேறு இடங்களுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

யாழ்ப்பாணப் பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவத்தில் உயிர் இழப்புகள் எவையும் ஏற்படவில்லை.

## யாழ். முஸ்லிம்களுக்கு வீடமைப்பு புதிய விதிகள் கூறுகிறார் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். திரும்பிய அனைத்து முஸ்லிம் குடும்பங்களுக்கும் வீடமைப்பு உதவிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏற்கனவே யுத்தத்தில் வீடமைப்பு உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வீடமைப்பு உதவிகள் வழங்கப்படமாட்டாது என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த நிலையில் புத்தளத்தில் தங்கியிருந்த முஸ்லிம்கள் அங்கு அரசாங்கத்தின் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற்றிருந்தால் அவர்களுக்கு மீண்டும் யாழ்ப்பாணத்தில் வீட்டுத் திட்ட உதவிகள் வழங்கப்படமாட்டாதென யாழ். மாவட்ட அரச அதிபர் கண்டிப்புடன் தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் வீட்டுத்திட்ட உதவிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் யாழ்ப்பாணத்தில் மீள் குடியமர்ந்திருந்தால் அவர்களுக்கு வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய முஸ்லிம்கள் தங்களுக்கு எந்தவிதமான வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்படவில்லை என யாழ். முஸ்லிம் மக்கள் தெரிவித்தனர்.

## அம்பாந்தோட்டையில் துப்பாக்கிச்சூடு


### குடும்பஸ்தர் பலி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை - பதகிரிய பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இனம்தெரியாத இருவர் நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சூட்டுச் சம்பவத்தில் 50 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுடில்லி விரைகிறார் ரணில்



(கொழும்பு)

புதுடில்லியின் அவசர அழைப்பையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணமாகவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று காலை புதுடில்லி விரைகிறார்.

அவர் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி உட்பட உயர்மட்டத் தலைவர்களையும், (15 ஆம் பக்கம் பார்க்க)

மாணவச் செல்வங்களே
☞ உள்ளே கல்வி முரசு
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I

## ‘நிகொட்’ வழங்கிய கூட்டுறவுப் பயிற்சி

# ஊழியர்களுக்கு பயனற்றுப் போனமை ஏன்?

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிநெறிகளினால் அவர்களின் சேவைத்தரம் உயர்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போகும் சந்தர்ப்பம் தோன்றியுள்ளது.

குறிப்பாக மேற்படி பணியாளர்களால், பின்பற்றப்பட்டு வந்த ‘கூட்டுறவு வியாபார உயர்முகாமைத்துவ டிப்ளோமா’ பயிற்சி நெறியில் தேர்ச்சி பெற்றவர்கள் அதன் அடிப்படையில் தமது பதவி உயர்வுகளையோ அல்லது உயர் சேவைத்தரங்களையோ பெற்றுக்கொள்ள முடியாத நிலை நீடிக்கிறது.

ஏனெனில், மேற்படி பயிற்சி நெறியைக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு கூட்டுறவு பணியாளர் நியமனத்துக்கான தகைமைப் பட்டியலில் இதுவரை இணைத்துக் கொள்ளவில்லை.

கடந்த 2008ஆம் ஆண்டு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களம், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை ஊடாக நிகொட் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வழங்கிய மேற்படி கூட்டுறவு வியாபார உயர்முகாமைத்துவ டிப்ளோமாப் பயிற்சியில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த இருபதுக்கு மேற்பட்ட பணியாளர்கள் ஒரு வருடப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்து தேர்ச்சி பெற்று வெளியேறியுள்ளனர்.

மேற்படி பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து இரு வருடங்களுக்கு மேலாகியும், அப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய டிப்ளோமாதாரிகள் அப்பயிற்சிக்கான சான்றிதழினை கூட்டுறவுச் சங்க உயர் பதவிகளுக்கு அடிப்படைத் தகைமையாகப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கூட்டுறவுப் பணியாளர் உயர் பிரிவுக் கற்கை நெறி, சங்கத்தின் உயர் பதவிகளுக்கு தகைமையாக இணைக்கப்பட்டிருப்பது போல், அப்பயிற்சி நெறிக்கு மேலதிகமானதான மேற்படி டிப்ளோமா பயிற்சி நெறியினையும் கூட்டுறவுச் சங்கத்தின் உயர் பதவிகளுக்கு கோரப்பட்ட உயர் தகைமையாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அங்கீகரிக்க வேண்டுமெனப் பயிற்சியினைப் பெற்றவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பெரும் சிரமத்தின் மத்தியிலும் தமது பயிற்சியினைத் திறம்பட முடித்துச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றபோதும், இதுவரை காலமும் அப்பயிற்சியினைப் பெற்றுக் கொண்டமைக்கான பலனை அடைய முடியவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த டிப்ளோமாதாரிகளுக்கான உரிய தீர்வினை கூட்டுறவுத் திணைக்களம் முன்வைக்க வேண்டும் என அவாகள் எதிர்பார்க்கின்றனர். (27)

# காணாமல் போகும் கடற்பன்றி இனம்



(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் காணப்படும் “டுகோன்”என்ற கடற்பன்றி இனம் தற்போது வேகமாக அருகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முறையற்ற மீன்பிடி முறைகள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

கற்பிட்டி மற்றும் மன்னார் கடற்பரப்புக்களில் டைனமைட், தடை செய்யப்பட்ட வலைகளை மீன்பிடிக்கு பயன்படுத்துதல் மற்றும் எண்ணெய் பரவல் உள்ளிட்ட காரணங்களாலேயே மேற்படி கடற்பன்றி இனம் அழிவடைந்து வருவதாக குறித்த திணைக்களம் குறிப்பிடுகின்றது. கடற்தாவரங்களை மாத்திரமே உட்கொண்டு வாழும் இந்த கடற் பன்றி இனத்தின் ஆயுட் காலம் 70 ஆண்டுகளாகும்.

சுவாசிப்பதற்காக இரண்டு அல்லது மூன்று தடைவைகள் நீருக்கு வெளியே வருவதே இந்தக் கடற்பன்றி இனத்தின் அழிவுக்கு காரணமாக அமைந்துள்ளது என்று மேற்படி வனஜீவராசிகள் திணைக்களம் மேலும் குறிப்பிடுகின்றது.

# அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி இர தோற்சவமும், 19ஆம் திகதி தீர்த் தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (11)

# தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை-சாவற்கட்டு அந்திக்குழி ஸ்ரீ ஞானவைரவர் காளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் தற்போது சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

நாளை இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (கா)

# புகைபொருள் எதிர்ப்பு கொடிவாரம் ஆரம்பம்

வவுனியா-செட்டிக்குளம் பிரதேச செயலகத்தால் நாளை முதல் எதிர்வரும் ஜுன் மாதம் 16ஆம் திகதி வரை புகைப்பொருள் எதிர்ப்பு கொடி வாரமாக கொண்டாடபப்படவுள்ளது.

சமுர்த்தி அதிகார சபையினரால் நடாத்தப்படுகின்ற இவ் கொடி வாரத்தில் பெறும் நிதியை அப்பிரதேச மக்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக பயன்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களிடையே புகைப்பழக்க வழக்கத்தை குறைத்து ஆரோக்கிமான சமுதாயத்தை உருவாக்குவதற்கே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. (12)

# நிர்வாகசபை தெரிவு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று இடம் பெற்றது. தலைவர் கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய தலைவராக கீதபொன்கலன், செயலாளராக செல்வரெட்ணம், பொருளாளராக ஆனந்தராசா, யூனியன் விளையாட்டுக் கழகத் தலைவராக அமிர்தநிறஞ்சன், அடைக்கலநாயகி பாலர் பாடசாலை தலைவராக யோண்சிங்கம், நிலையத்தின் போஷசகராக புனித அடைக்கலநாயகி ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி யோதிநாதன் அடிகளார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# மனைவியைக் கொன்றவரை பிணை எடுக்க எவருமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்ட போதிலும் பிணை நிபந்தனைகளை மேற்கொள்ள எவரும் முன்வராததால் தொடர்ந்தும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் வழக்கின் எதிரி.

கடந்த 2008 நவம்பர் 27 ஆம் திகதி கர்ப்பிணியான மனைவியைக் கொலை செய்ததாக நாவற்குழி தெற்கைச் சேர்ந்த ரவீந்திரன் சுரேஷ் என்பவர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.இந்த வழக்கு அண்மையில் சாவகச்சேரி நீதிமன்றால் யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. கடந்த 19 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த நபரை 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல மேல் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

அத்துடன், பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடப்படல் வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.இந்த நிலையில் இவரைப் பிணையில் எடுக்க எவரும் முன்வராததால் தொடர்ந்தும் அவர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஸ்கந்தாவில் முத்தமிழ் விழா




(தெல்லிப்பளை)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தமிழ் மன்றத்தால் நடத்தப்படும் முத்தமிழ் விழா நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், பிரதம விருந்தினராக தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்தமிழ் வித்தகி பேராசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் கலந்கொள்வார்.

செல்வன் சிவாஜி அமுதனின் பேச்சு, வி.நிலுக்ஷனின் கவிதை, குழுநடனம், பு.கணேசராஜாவின் நெறியாள்கையில் உருவான ‘மாநிலம் பயனுற’ நாடகம் என்பன இங்கு நடைபெறவுள்ளன.

சிறப்பு நிகழ்ச்சியாக தமிழ் நாடு கரகாட்ட வித்தகர்கள் நவராஜ் சாருமதி தம்பதிகளின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சியும் இடம் பெறும். (44)


## மனோதத்துவ வைத்தியம்

GENERAL PSYCHOTHERAPHY

யாழ்ப்பாணத்தில் 28.05.2011 - 01.06.2011

**5 நாட்கள் மட்டுமே**

அகில உலகெங்கும் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P.ஆறுமுகம அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்துப் பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

பாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.

★ பதிவு செய்தவர்களும், புதிதாகப் பதிய விரும்புபவர்களும உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கமல்ரூரிஸ்ற் இன்,
392/A மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)
தொ.பே.இல - 0214922403.
Hot line - 0719315664, 0777569205.

(C/732)


# வடபகுதியின் அபிவிருத்திக்கு விசேட கவனம் வேண்டும்





(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் பாதிப்புக்களை முழுமையாக சுமந்த வடக்கு பிரதேசத்தின் விரைவானதும் நிறைவானதும் அபிவிருத்திக்கு வங்கித்துறையினர், தனியார் துறையினர் உள்ளிட்ட அனைவரும் விசேட கவனம் செலுத்த வேண்டுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் கேட்டுக் கொண்டார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நஷ்டஈடு மற்றும் இலகு கடன்கள் வழங்கும் நிகழ்வில்' உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர உரையாற்றுகையில், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளை தேசிய அபிவிருத்தியில் அவர்களை இணைத்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்காக பல திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், புனர்வாழ்வு முகாம்களில் மக்களைப் பாதுகாப்பதற்கு என மாதாந்தம் 100 மில்லியன் ரூபாயை அரசு செலவு செய்து வருகின்றது. முன்னாள் போராளிகளின் வாழ்வியலில் நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களையும் சமூகத்துடன் இணைத்து வருகின்றோம். இது எமது அரசாங்கத்திற்கு மிகப் பெரும் சவாலாகும் என்றார்.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, புனர்வாழ்வு சபையின் தலைவர் சமரசிங்க,.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார். அமைச்சின் செயலாளர் திஸநாயக்க, அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ் குமார் உட்பட உயரதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உருவத்தில் மனிதனாகவும், குணத்தில் மிருகமாகவும் இருக்கக்கூடாது. மனிதத்தன்மையில் இருந்து தெய்வத்தன்மை பெற வேண்டும். அது முடியாவிட்டால் மிருகத் தன்மைக்காவது போகாமல் இருக்க வேண்டும்.

-வாரியார்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# வீர வசனமும், வதையும்!

எழுத்துக்கு உள்ள வலிமையைப் போல் வேறு எதற்கும் இல்லை என்றே சொல்லலாம். என்னென்ன விதமாகவோ எல்லாம் அங்கங்களைக் காட்சிப்படுத்திப் பத்திரிகைகளில் படங்கள் வரும்போதும், தமிழ் சினிமா பாடல் காட்சிளின் போதும் பதறாத சமூகம், கவிஞர் குட்டி ரேவதி போன்றோரின் நூலுகுத் தலைப்பாகவும், கவிதைகளின் இடையேயும் அந்த அங்கங்களை எழுத்தில் பார்த்ததும், எழுதியவரகளை முச்சந்தியில் நிறுத்திக் கசையடி கொடுக்க வேண்டும் என்று கோபத்தில் சீறுகிறது.

எழுத்து நம்மைப் பாதிப்பது மட்டுமல்ல, நமக்குள் ஊடுருவி நம் சிந்தனை முறையையே வழிவமைக்கவும் செய்கிறது.

இதனால் நம் கண் முன்னால் நடப்பவைகளிலிருந்து, அவற்றின் பாதிப்பிலிருந்து நம் தீர்மானங்கள் உருவாவதைவிட, எழுத்தில் வருபவற்றை வாசித்தோ கேட்டோ அறிந்துகொண்டதிலிருந்தே நம் எண்ணங்களை உருவாக்கிக் கொள்கிறோம் என்று தெரிகிறது.

நம் வெறுப்பு, கோபம், எதிர் விளைவை நினையாத எழுச்சி கொள்ளல்கள் எல்லாம் பத்திரிகைகளிலும், பிரசுரங்களிலும், இணையங்களிலும் நாம் கண்ட எழுத்துக்களோடு உறவுகொண்டு வந்த கும்பல் மனோபாவம்தான்.

இல்லாவிட்டால், இவ்வளவுக்குப் பிறகும்கூட “மறப்போமா வன்னி மண்ணே”, “முள்ளிவாய்க்கால் முட்செடியே” என்று அழிவு வீரத்தையே திரும்பத் திரும்ப ஊசிமருந்தாக ஏற்றிக்கொண்டிருப்பதை அனுமதிக்கமாட்டோம்.

இது புலம்பெயர்ந்தோர் இணையத் தளங்களையும், தமிழ்நாட்டில் வைகோ, சீமான் வகையறாக்களின் உணர்ச்சிப் பூச்சுத்தல்களையும் வாசித்து வாசித்து நமக்குள் வளர்வதுதான்.

அல்லாமல், நமது மக்களின் உண்மையான நிலைமை என்ன? அவதி என்ன, தேவை என்ன? என்பது பற்றியெல்லாம் நம்மில் பலரது சிந்தனைக்குள் வரவே மறுக்கிறது. பட்டுவேட்டி பற்றிக் கனவு கண்டுகொண்டிருப்பதே போதுமானதாயிருக்கிறது.

வீர வசனங்களும், மறுத்தான் வாய்ப்பேச்சுச் சண்டித்தனங்களும், நம் முன்னாட் பீடும் பெருமையும் பற்றிய, போதை நினைவில் சென்றுகொண்டிருப்பதே நம்மில் சிலருக்குப் போதுமாயிருக்கிறது.

அதையெல்லாம் வேண்டியளவிற்கு எழுத்துக்களாக்கி ஊட்டிக்கொண்டிருப்பதை நாட்டிற்கு வெளியே உள்ளவர்கள் பகுதி நேர வேலையாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவை தந்த உறவுப் பலத்தில் உள்ள நிலைமை மறந்த கிறுகிறுப்பில் இங்குள்ளவர்களும் அதே வீரவசனங்களையே நகலெடுத்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.


குரலற்று, வாழ்விழந்து வாடும் பெரும்பான்மையான சாதாரண மக்களின் பாடுகள், ரோசம் நிறைந்த இவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. மீறித் தெரியவரும் போதெல்லாம் முகம்மது இபின் துக்ளக் போல இவர்களிடமும் சொல்ல ஒரு வார்த்தை இருக்கிறது. “நமக்கென்று தனி அதிகாரம் கிடைத்துவிட்டால் மக்களின் எல்லாக் கஷ்டமும் தீர்ந்துவிடும்!”

கழுதைக்கு முன்னால் கரட்டைக் கட்டித்தொங்கவிட்டுச் சவாரி செய்வதுபோல, இவர்களும் இதையே சொல்லி நொந்த மக்கள் மீதேறிச் சவாரி செய்துகொண்டிருக்கிறார்கள்.

-ஆசிரியர்-

# அபிவிருத்திப் பணிகளின் பலாபலன்களை குறிப்பிட்ட காலத்தின் பின் மக்கள் அனுபவிப்பர்

## சங்கானையில் ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர்



(யாழ்ப்பாணம்)

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்று வந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து எமது பிரதேசம் துரித கதியில் பல்வேறு வடிவங்களில் மாற்றங்களைக் கண்டு வருகிறது. இத்தகைய மாற்றங்களின மூலம் ஆக்கபூர்வமான அபிவிருத்திச் செயற்பாடுகளில் காப்புறுதி முக்கிய பங்கினை வகிக்கிறது என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான எம்.சந்திரகுமார் தெரிவித்தார்.

இலங்கைக் காப்புறுதி நிறுவனத்தின் 126 ஆவது கிளையை சங்கானையில் நேற்றுமுன்தினம் திறந்து வைத்துப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திறப்பு விழாவுக்கு முன்னதாக சங்கானைப் பேருந்து நிலையப் பகுதியில் இருந்து விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசை அணி வகுப்புடன் கிளை நிலையத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

காப்புறுதித் துறையைப் பொறுத்த வரையில் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில தான் அது பெரும் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியுள்ளது. இதனால் தான் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள காப்புறுதிகள் அதி உச்சப் பயனைப் பெறுகின்றன.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த அபிவிருத்தித்திட்ட வேலைகளின் பலன்களை குறிப்பிட்ட காலத்தின் பின் மக்கள் அனுபவிக்க முடியும் என்று கூறினார்.

இந்நிகழ்வில் இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர மொஹான் டீன அல்விஸ், உதவிப் பொதுமுகாமையாளர் நிஸங்க விக்கிரம சூரிய, ஈ.பி.டி.பியின் வலிகாமப் பிரதேச ஒருங்கிணைப்பாளர் ஜீவன் மற்றும் காப்புறுதி நிறுவனத்தின் உயரதிகாரிகள், காப்புறுதி முகவர்கள், மதகுருமார்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

# பாடசாலைக்கு முன்பாக மீன் வியாபாரிகள்; கல்விச் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி-முரசுமோட்டைப் பொதுச்சந்தை இதுவரை மீள ஆரம்பிக்கப்படாமையால், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பொதுச்சந்தை திறக்கப்படாமையால் வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் பாடசாலை முன்றலிலும், பொது இடங்களிலும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மீன் வியாபாரிகள் கிளிநொச்சி-முரசுமோட்டை முருகானந்தா ஆரம்பப் பாடசாலை முன்றலில் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் இதனால் அருகிலுள்ள பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு இவை பெரிதும் இடையூறாகக் காணப்படுவதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதைவிட ஏனைய வியாபாரிகளும் பாடசாலையை அண்மித்த பகுதிகளிலேயே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், இதனால் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து பொதுச்சந்தையை உரிய இடத்தில் இயக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என அப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் நிபுணர்குழு அறிக்கை விவாதிக்கப்பட மாட்டாது

## என்கிறது கொழும்பு வார இதழ்

(கொழும்பு)

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை பற்றிக் கலந்துரையாடப்படமாட்டாது என்று இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

47 உறுப்பு நாடுகள் பங்கேற்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இந்தக் கூட்டத்தொடரில், ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையின் அடிப்படையில் இலங்கை தொடர்பான சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கக் கோரும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர சில மேற்கு நாடுகள் திட்டமிட்டுள்ளன. ஆனால் இலங்கை தொடர்பான இந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு அநேகமாக செப்ரெம்பரில் நடைபெறும் அடுத்த கூட்டத்தொடருக்குப் பிற்போடப்படுவதற்குச் சாத்தியங்கள் உள்ளதாக இராஜதந்திர வடடாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஐ.நா. பொதுச் செயலருடனான சந்திப்பின் போது உள்ளகப் பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கு இலங்கைக்குக் காலஅவகாசம் தேவைப்படுவதாக ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன கூறியிருந்தார்.

இலங்கைக்கு மேலதிக கால அவகாசத்தை வழங்குவதும் இதற்கு ஒரு காரணமாகும்.

மேற்கு ஆசியா, வடஆபிரிக்காவின் மனிதஉரிமை நிலைமைகள் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் மேற்குநாடுகளின் கவனத்தை அதிகளவில் ஈர்த்திருப்பதும் மற்றொரு காரணம். இன்று ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான விவாதமும் உள்ளடக்கப்பட வேணடும் என்று புலம்பெயர் தமிழர்கள் கோரி வருகின்றனர். ஆனால் இவர்களின் முயற்சிகள் வெற்றியளிப்பது சாத்தியமில்லை என்றும் கொழும்பு ஆங்கில வார இதழ் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

# கடல் வளத்தை அழிக்கும் நடவடிக்கைக்கு தடைவிதிப்பு

(பூநகரி)

கடல்வளத்தை அழியவிடாது அதனைப் பாதுகாக்கும் வகையில் தங்கூசி வலைத்தொழில், இழுவைப்படகு பாவித்தல், கடலாமை பிடித்தல், சினை நண்டு மற்றும் சினையுடைய சிங்கிறால் பிடித்தல் போன்ற கடற்றொழில் நடவடிக்கைகளுக்குத தடை விதித்துள்ளதாக பூநகரி, நாச்சிக்குடா யாகபபர் கடற்றொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இத்தடை விதிப்புத் தொடர்பாக சங்கச் செயலாளர் தெரிவிக்கையில், மேலே தெரிவிக்கப்பட்டுள்ள தடைசெய்யப்பட்டுள்ள கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கடல் வளத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சட்டரீதியற்ற பல்வேறு விதமான கடற்றொழில் நடவடிக்கைகளில் கடல்வளம் பெருமளவு அழிக்கப்பட்டு வருவதாகவும் கடற்றொழிலாளர் கவலை வெளியிட்டுள்ளனர்.

# துரித கதியில் ஆலய திருப்பணி வேலைகள்

(யாழ். நிருபர்)

நீர்வேலி - அரச கேசரிப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூன் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனையொட்டி ஆலய திருப்பணி வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தைச் சேர்ந்த புருஷோத்தமன் தலைமையிலான குழுவினர் தற்போது புதிய சிலைகள், சிற்பங்களைச் செய்து பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கோயிலின் முகப்பில் யாழ்ப்பாணத்து அரசன் பரராஜசேகர சிங்கையாரியனின் தலைமை மந்திரியும் மைத்துனனுமாகிய அரசகேசரிக்கு சிலையமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. (10)

# தமிழை சரியாக எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்களை நினைக்க கவலை அளிக்கிறது

## கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர்

(யாழ். நிருபர்)

மாணவர்களைச் சமுதாயத்துக்குப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும், தாய்மொழியில் புலமைமிக்கவர்களாகவும் உருவாக்கவேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு. தனது தாய் மொழியாகிய தமிழ்மொழியைச் சரியாக எழுத, வாசிக்கத்தெரியாத மாணவர்கள் குடாநாட்டுப் பாடசாலைகளில் இருப்பது வேதனையளிக்கிறது.

இவ்வாறு கோண்டாவில் இந்து மகாப் வித்தியாலய தமிழ்மன்றம் நடாத்திய தமிழ் மொழித்தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் வே. கா. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

தமிழ் மன்றத்தலைவர் ர. சிந்துஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

விளையாட்டுத்துறையிலும், நாடகம் போன்ற கலைத்துறைகளிலும் தமது திறன்களை வெளிப்படுத்தும் மாணவர்களில் பலர் எழுத, வாசிக்க கஷ்டப்படுவதால் பொதுப்பரீட்சைகளில் சித்திபெறத் தவறிவிடுகின்றனர். இவர்களை மெல்லக் கற்போராக இனங்காண்பதால் மட்டும் பயன் இல்லை. அவர்களின் எழுத்துக்களை இனங்கண்டு எழுதவும் எழுதியவற்றை வாசிக்கவும் ஆசிரியர்களும், பெற்றோரும் பயிற்சியளிக்க வேண்டும்.

இன்று பெரும்பாலான மாணவர்களின் நேரத்தை தொலைக்காட்சிகள் விழுங்கி விடுகின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மாணவர்களைக் கல்விப் புலத்திலிருந்து வேறு திசைக்குத் திருப்பி விடுகின்றன.

மாணவர்களின் ஒழுக்கம் சீரழிகிறது. கலாசார சீர்கேடுகளில் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று பத்திரிகைகளில் அறிக்கைவிடும் கல்விப்புலம் சார்ந்தோர், மாணவர்களின் ஒழுக்கத்தில் அக்கறை செலுத்தவேண்டும். பெற்றோரும் பிள்ளைகளைக் கண்காணிக்கவேண்டும். பாடசாலைக்கு அனுப்பிவிட்டு பெற்றோர் தூர நின்று பிள்ளையின் கல்வி நடவடிக்கையை மட்டும் அவதானிப்பது பெருத்தமானதல்ல. ஒழுக்கச்செயற்பாடுகள் பற்றி பெற்றோர் மிக அவதானமாக விழிப்புடன் இருக்கவேண்டும்.

மாணவர்கள் தாம் கற்கும் பாடசாலை மீதும் ஆசிரியர்கள் மீதும், தாய்மொழி மீதும் பற்றுவைக்கவேண்டும். இன்று மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கம் அருகி வருகிறது. நிறைய அறிவு நூல்களை வாசிக்கவேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசிக்க வேண்டும்.



வாசிப்பதனால்தான் ஒருவன் பூரண மனிதனாக முடியும்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்காக கற்கும் மாணவருடன் பெற்றோரும் சேர்ந்து கற்கிறார்கள். சிறுபிள்ளைகளிடம் பல விடயங்கள் வற்புறுத்தி திணிக்கப்படுகின்றன. புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பரீட்சை எனக் கூறுவது பொருத்தமானதல்ல. மொழியாற்றலை விருத்திசெய்தால் பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வர் என்று கூறினார். (10)

## பிரார்த்தனை நிகழ்வு

(யாழ். நிருபர்)

சுவாமி விபுலானந்தர் அவதரித்த மட்டக்களப்பில் ஸ்ரீ இராம கிருஷ்ண திருமடத்தின் தலைவராக விளங்கி சிறந்த பணியாற்றி வந்த சுவாமி அஜராத்மானந்த மஹராஜ் சமாதியடைந்தமையை முன்னிட்டு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் பிரார்த்தனை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி தவத்திருகணேசானந்த மகாதேவ சுவாமிகள், சின்மயானந்தா மிஷனைச்சேர்ந்த சுவாமி ஜரக்கிரத் சைதன்னா ஆகியோர் கலந்து கொண்டு பிரார்த்தனை அஞ்சலி செய்தனர். (10)

## குடமுழுக்கு விழாவில் திருமுறை முற்றோதல்

(யாழ். நிருபர்)

காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்துறை திருவருள்மிகு ஸ்ரீ சௌந்தராமிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு எதிர்வரும் 6ஆம் திகதி பெரும் சாந்திவிழா நடைபெற உள்ளது.

இப்பெருவிழாவை முன்னிட்டு பூரணை தினமான எதிர்வரும் 15ஆம் திகதி வரையும் எம் பெருமான் திருமுன்னிலையில் பன்னிரு திருமுறை முற்றோதல் பாராயணம் செய்ய திருவருள் கூடியுள்ளது.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் காரைநகர் சிவனெறித் தொண்டர்களின் அனுசரணையுடன் இப்பன்னிரு திருமுறைப் பாராயணம் நடைபெறவுள்ளது. (10)

# கிளிநொச்சி மாவட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்ட இளைஞர்கள் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 2011ஆம் ஆண்டிற்கான இளைஞர் கௌரவிப்பு நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்ட இளைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இளைஞர்சேவை மன்றத்தினால் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இதில் கௌரவிக்கப்பட்ட இளைஞர்களின் விபரம் வருமாறு:-

**க.பொ.சா/த பரீட்சை 9ஏ, பி**
சந்திரசேகரம் பானுப்பிரியன் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்)

**க.பொ.உ/த கலைப் பிரிவு 2ஏ, பி**
சிறிராசா டெனிஸ்ரா (முருகானந்தா மகா வித்தியாலயம்)

**க.பொ.உ/த வர்த்தகப்பிரிவு 3ஏ.**
கனகராசா கிருந்தன் (அக்கராயன் மகாவித்தியாலயம்)

**க.பொ.உ/த விஞ்ஞானப்பிரிவு 2ஏ, பி.**
புவனேஸ்வரன் ஜோதிகா (வட்டக்கச்சி மகா வித்தியாலயம்)

**க.பொ.த உ/த கணிதப்பரிவு 3ஏ**
கதிர்காமநாதன் மகிந்தன் (கிளிநொச்சி மத்தியகல்லூரி)

**சிறப்பாக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்.**
இ.போல்ராஜ் கரைச்சி, தமிழ்மாறன் கண்டாவளை, முகமட் சாதிக் - பூநகரி, மதனதர்சன் - பளை.

**சிறந்த விளையாட்டு வீரர்**
இ. பிரசாந்தன் (கல்மடு - கண்டாவளை)

**சிறந்த வீராங்கனை**
பி. விமலாதேவி (கிருஷ்ணபுரம், கிளிநொச்சி)

**சிறந்த பாடகி**
முனுசாமி பிரபா (மலையாளபுரம், கிளிநொச்சி)

**சிறந்த குறு நாடகம் (2006)**
வே. சுபிதா (நாகேஸ்வரா வித்தியாலயம்)

**விவசாயம்**
குகனேஸ்வரன் கஜீபன்

**மீன்பிடி**
அமிர் முஹம்மது சுனஸ் (நாச்சிக்குடா, முழங்காவில்)

**மாற்றுவலுவுள்ளோர் (வியாபாரி)**
மகேந்திரன் சந்திரசேகரம்

**கராட்டி**
செ.செல்விகா(உருத்திரபுரம்)

**குத்துச்சண்டை**
கிருஷ்ணராசா ஜெயஸ்-கல்மடு- கண்டாவளை)

**ஓய்வு பெற்ற சிறந்த இளைஞர் கழக உத்தியோகத்தர்.**
எஸ். எஸ்.யேசுதாஸ்

**சிறப்பாக செயற்பட்ட இளைஞர் கழகம்**
இளந்தளிர் கல்மடு. (77)

# 34 பயனாளிகளுக்கு 11 லட்சம் வாழ்வாதாரக் கடனுதவி



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறைக் கிராமத்தில்பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் காசுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் அதன் ஒரு பகுதியாக வாழ்வாதாரக்கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

உடுத்துறை கிராம மீள் எழுச்சித்திட்டத் தலைவர் வீரகத்தி கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வினில் 34 பயனாளிகளுக்கு 11 லட்சம் ரூபா முதற்கட்டக் கடனாக வழங்கப்பட்டது.

இவர்கள் பல்வேறு சுயதொழில்களை மேற்கொள்ள உதவி கோரியிருந்தனர். யாழ். மீள் எழுச்சித்திட்ட உதவிப்பணிப்பாளர் சா.சுதர்ஷன், மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், பருத்துத்துறை பிரதேசசபை பிரதம லிகிதர் திரு. பூபாலசிங்கம், கிராமசேவகர் திரு. இரட்ணராஜா, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் தென்மராட்சி அமைப்பாளர் சூ.அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்) ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்தினர். முன்னதாக உடுத்துறை பிரதேசத்திற்கான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் காசுக்கான வேலைத் திட்டத்தின் பெயர்ப்பலகை பிரதேச மூத்த கிராம பிரஜைகளால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

# பார்வைக் குறையுள்ள பெண்களுக்கு கைதடியில் புதிய விடுதி நிர்மாணம்



(கைதடி)

பார்வைக் குறைபாடு உள்ளபெண்கள் தங்கும் வகையில், அவர்களுக்கென சகல வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் கைதடியில் நிர்மாணிக்கப்பட்ட விடுதியை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி திறந்து வைத்தார்.

வடமாகாணசபை இந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு 6.5 மில்லியன் ரூபாவை சமூக சேவைகள் திணைக்களத்திடம் வழங்கியிருந்தது. அந்த நிதியின் மூலமே, இந்த விடுதி நிர்மாணிக்கப்பட்டு, கடந்த 23ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்தத் திறப்பு விழா நிகழ்வில் வடமாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் கே. சிவகரன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன், சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட அலுவலர் எ. ஞானவேல் மற்றும் சமூக சேவைகள் திணைக்கள அலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## வைகாசி விசாக பொங்கல் பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கற்குழி பெருங்குளம் திருவருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய வைகாசி விசாகப்பொங்கல் பெருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை நடைபெறவுள்ளது.

அன்று காலை 9 மணிக்கு அம்மனுக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும் ஆராதனைகள் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றலுடன் நண்பகல் அலங்கார ஆராதனைகளும் நடைபெறும்.

மாலை விளக்கேற்றலோடு இரவு உற்சவம் 12 மணிக்கு நடைபெறும். இதன்போது அம்மனும் காத்தவராயனும் அலங்காரமாக எழுந்தருளுவார்கள்.

எதிர்வரும் 10ஆம் திகதி எட்டாம் மடையும், பொங்கலும் இடம்பெறவுள்ளன. (75)



வலிகாமம் கிழக்கு பிரதேச மக்களுக்கு நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையில் நடைபெற்ற ஆயுர்வேத மருத்துவ முகாமை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.

# வன்னிப் பேரவலத்தில் சிக்கிய மக்களுக்கு உதவிய வைத்தியர் சத்தியமூர்த்திக்கு மனிதாபிமான விருது

(வவுனியா)

வவுனியா பொது மருத்துவமனையில் வைத்திய மேலதிகாரியாகத் தற்போது பணியாற்றும் வைத்தியர் த.சத்தியமூர்த்திக்கு சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான உள்ளக மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இவர் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளுக்காக இவ் விருது வழங்கப்பட்டுள்ளதாக சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் இவ்விருது பேரவலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு சேவையாற்றிய பொது நிறுவனங்கள் அல்லது ஆளுமைமிக்க தனிமனிதர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது முறையான வைத்திய வசதிகள் இன்றி, மருந்துத் தடைக்கு மத்தியில் தனது உயிரையும் பொருட்படுத்தாது உணர்வுபூர்வமாகப் பணியாற்றிய சத்தியமூர்த்திக்கு 2011 ஆம் ஆண்டுக்கான விருதை வழங்குவதில் தாங்கள் பெருமை அடைவதாக சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டுக்கும் 2002 ஆம் ஆண்டுக்கும் இடையில் கிழக்கு மாகாணத்தில் பணியாற்றிய இவர் 2003 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சுகாதார சேவைகளுக்கான பிராந்திய இயக்குநராக பணியாற்றியிருந்தார்.

அதேவேளை, கிளிநொச்சி மருத்துவமனைக்கான வைத்திய மேலதிகாரியாகவும், வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய் ஒழிப்புக்கான இயக்கத்தின் தலைவராகவும், செட்டிக்குளம் மெனிக் தடுப்பு முகாமின் சுகாதார இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

இக்காலப்பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்காக இவர் அளப்பரிய சேவைகளைச் செய்திருப்பதாக சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.



வன்னிப்போர் உக்கிரமமாக இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது தனது உயிரைத் துச்சமாக மதித்து இவர் ஏனைய மனிதாபிமானச் செயற்பாட்டாளர்களுடன் ஆற்றிய பணிகளையும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் நினைவுகூர்ந்துள்ளது. இவரின் மனிதாபிமானப் பணிகளை ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டு நிறுவனங்களும் பாராட்டியுளளதாக சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்பாக நேற்று நண்பகல் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் வலது காலில் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஆறுமுகம் பரமநாதன் (வயது-74) என்பவரே இச்சம்பவத்தில் படுகாய மடைந்துள்ளதுடன், இவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்றுப் பிற்பகல் கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது குறித்த வயோதிபர் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதியபோதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. (பா)

## ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம்

(யாழ்.நிருபர்)

ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் சிவன் கோயிலில் எதிர்வரும் யூன்மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் யூன் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இக் கும்பாபிஷேக நிகழ்வில் இலங்கை மற்றும் தென்னிந்திய தலைசிறந்த சிவாச்ரியார்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்கின்றனர்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (10)

## விடுதலைப் பெருவிழாவில் கலந்துகொள்ள அழைப்பு

(குருநகர்)

விடுதலைப் பெருவிழா 2011 யூன் மாதம் 2, 3, 4, 5 ஆம் திகதிகளில் மாலை 4.00 மணிக்கு யாழ். மாநகரசபை முன்னால் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதேவேளை பகல் கூட்டங்கள் யாழ். இராசாவின் தோட்டம் வீதி அசெம்பிளி ஒவ் கோர்ட் சபையில் நடைபெற இருக்கின்றன.

பெண்கள் சிறப்புக் கூட்டம் யூன் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

மற்றும் சிறப்பின் வாசல் உபவாசஜெபம் யூன் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரையும் இடம்பெறும்.

மேலும் வாலிபர் சிறப்புக் கூட்டம் யூன் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணிவரையும் நடைபெற இருக்கின்றது.

அனைவரையும் விடுதலைப் பெருவிழாவில் இணைந்து பாவம், வியாதி, கவலை, கண்ணீரிலிருந்து விடுதலை பெறவாருங்களென ஏற்பாட்டாளர் அழைப்பு விடுத்துள்ளனர். (68)

## உடைந்து விழும் நிலையில் கூரை; புனரமைப்பதற்கு ஏற்பாடு


(யாழ். நிருபர்)

காரைநகர் வடக்கு வலந்தலை அமெரிக்கமிஷன் பாடசாலையில் அமைந்துள்ள பழைய மண்டபக் கூரை பழுதடைந்த நிலையிலுள்ளது. இதில் உள்ள ஓடுகள் மாணவர்கள் மீது விழும் நிலையில் உள்ளன.

அண்மையில் இப்பாடசாலைக்கு விஜயம் செய்த தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் கல்வித்திணைக்கள நிதியுதவியுடன் இதனைப் புனரமைக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்துள்ளார்.

இலண்டன் காரை. நலன்புரிச் சங்கம் வழங்கும் நிதியுதவியுடன் இப்பாடசாலையில் குடிநீர் வசதி மற்றும் மின்சார இணைப்பு போன்றவற்றைச் செய்யவுள்ளதாக அதிபர் திருமதி கௌரி அருள் தெரிவித்துள்ளார். (10)

## நீர்க் கொள்கலன் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் 3000 லீற்றர் கொள்ளளவுள்ள இறப்பர் கொள்கலனொன்று மணியம்தோட்டம் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன் மற்றும் அப்பகுதி கிராம சேவையாளர் ஆகியோர் குறித்த இறப்பர் கொள்கலனை அப்பகுதி மக்களிடம் அண்மையில் கையளித்தனர்.

இக்கொள்கலனின் மூலமாக ஒன்றைவிட்ட நாள் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் நல்லூர் பிரதேச சபையினரினால் விநியோகிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## 112 குடும்பங்களுக்கு கூரைத்தகடுகள்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள மாரீசன்கூடல், மாதகல் கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியமரவுள்ள 112 குடும்பங்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட கூரைத்தகடுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலர் அ.யோ.எழிலரசியினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. (104)

எனக்கு நல்ல பழக்கமான கலைஞர் ஒருவரை 'கலாபூஷணம்' விருதுக்கு எழுதேல்லயோ எண்டு கேட்டன்.

'என்ன பூஞ்சணம்... அந்தப் பூஞ்சணந்தான இஞ்சை வீட்டுக்கு வீடு அதிகரிச்சுப் போச்சு என்டதும், உந்தச் சமாதான நீதவான் பட்டம் பெற்ற வையின்ர எண்ணந்தான் முதல்ல மனதில தைச்சுது.

'தடுக்கி விழுந்தாலும் ஒரு ஜேப்பீன்ர காலிலதான் தடுக்கி விழவேணு'மெண்ட நிலைதான் இப்ப எங்கையும். அந்த அலை இப்ப குறைஞ்சு போச்சு!

அதைப்போல கலாபூஷணமும் வீட்டுக்கு வீடு மலிஞ்சுதான் கிடக்கே... எண்டால் அவர் அதைச் சொல்லேல்ல, உந்த சிலந்தி வலை பின்னிவாற பூஞ்சணத்தைச் சொல்றாரெண்டு பொறி தட்டிச்சு!

இந்தக் கலாபூஷணமும், சமாதான நீதவான் பட்டம் வாங்கிறதுபோல, ஒரு வியாதிபோலதான் கிடக்கு. ரெண்டு வருசத்துக்கொருக்கா குடுக்கிற உந்தப் பட்டத்துக்கு இண்டைக்குள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களூடாகவும் விண்ணப்பிக்கச் சொல்லிக் கேட்டிருக்கினம்.

நான் விளங்காமல் கேக்கிறன் உது என்னத்துக்குக் குடுக்கினம்? முதுகு சொறியுறதுக்கோ! பின்ன என்னவாம் கலைஞர்களைக் கௌரவிக்கிறேன்டா ஆரும் கேட்டே கௌரவிக்கிறது.

சரி இந்தச் சிறிலங்காவில இருக்கிற எல்லாரையும் குழுவில இருக்கிறவைக்கு தெரியாட்டா, ஒருமுறை விண்ணப்பிச்சதை வைச்சுக்கொண்டு கலைஞர்களைத் தெரிவுசெய்து கௌரவிக்கலாம் தானை.

ஒவ்வொரு முறையும் விண்ணப்பிக்கிற எண்டா அது வில்லங்கமா எனக்குத் தா தாவெண்டு கேக்கிற மாதிரி இல்லையே! அதுல என்ன கௌரவம் கிடக்கு?


அறுபது வயதுக்குப் பிறகு குடுக்கிற உந்தப் பட்டத்தை அதுக்கு முன்னம் பெற்றவையும் இருக்கினம். ஒருதடவை விண்ணப்பிச்ச உடன கிடைச்சும் இருக்கு. ஐந்து தடவைக்கு மேல விண்ணப்பிச்சும் இன்னும் பட்டத்துக்கு ஏங்கிறவையுமுண்டு!

அதேவேளை இரண்டு தடவை விண்ணப் பிச்சு மறுமுறை விண்ணப்பிக்காதவைக்குக் குடுபட்டும் இருக்குது.

இந்தச் சீத்துவக் கேட்டாலதான் சிலருக்குச் சீப்பறிஞ்சு போச்சு!

ஒருமுறை கிடைச்ச விண்ணப் பத்தை வைச்சு கலைஞர்களைக் கௌரவிச்சா லென்ன? அதுதான் கலைஞர்களைக் கௌரவிச்சதா இருக்கும்.

நம்ம கலைஞர்கள் 'கலாபூஷணம்' என்டால் கடவாயில கலை ஒழுகாதா? ஏனந்தப் பூஞ்சணத்தை எண்டு விடவா செய்வினம்...?




## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(30.05.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
வைகாசி 16 ஆம் நாள்.
இராகுகாலம் 7.22–8.52, சுபநேரம் 11.52 –1.22,
நட்சத்திரம் அச்சுவினி மு.ப.10.15 வரை
திதி: திரயோதசி மு.இ. 1.14 வரை
பிரதோஷ விரதம் – கரிநாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பண வரவு, குடும்பத்தில் குதூகலம், மன நிம்மதி, தேக சுகம் நலம், விபத்து வரும் கவனம்.

ரிஷபம்:– வீட்டில் நிம்மதியின்மை, மனச் சஞ்சலம், வீண் பயம், திருடர் தொல்லை, கவலை.

மிதுனம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், அயலவர் பகை, மனக் கவலை, நண்பர் தொல்லை.

கடகம்:– நண்பர் வருகை, பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், விபத்து வரலாம், மன அமைதி.

சிம்மம்:– குடும்பத்தில் கலகம், மனச் சஞ்சலம், பணக் கஷ்டம், அயலவர் பகை, வீண் அலைச்சல்.

கன்னி :– நண்பர் வருகை, பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், விபத்து வரலாம், மன அமைதி.

துலாம் :– பணக் கஷ்டம், வீட்டில் கலகம், மனச் சஞ்சலம், அயலவர் தொல்லை, கவலை.

விருச்சிகம்:– பணம் வரும், திருடர் பயம், நண்பர் தொல்லை, விபத்து வர இடமுண்டு, மனக் கவலை.

தனுசு:– திருடர் பயம், பணம் வரும், மனத்தில் குழப்பம், தேக சுகம் பாதிப்படையும், கவலை.

மகரம்:– நண்பர் வருகை, மன மகிழ்ச்சி, குடும்பத்தில் மகிழ்ச்சி, அயலவர் நட்பு, சபலம்.

கும்பம் :– பண வரவு, வீண் அலைச்சல், திருடர் பயம், மன மகிழ்ச்சி, நண்பர் தொல்லை.

மீனம்:– குடும்பத்தில் குழப்பம், வீண் கற்பனை, மனக் கவலை, பணக் கஷ்டம், அயலவர் பகை.

# விலகுகிறார் ஹிண்டர்

(பரீஸ்)

சுவிட்சர்லாந்தின் பிரபல ரென்னிஸ் வீராங்கனை பட்டி ஹிண்டர் சர்வதேச ரென்னிஸில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

32 வயதான இவர் குடும்பம் உள்ளிட்ட மற்ற விடயங்களில் கவனம் செலுத்த விரும்புவதாகத் தெரிவித்தார்.

உலக ரென்னிஸ் தரப்படுத்தலில் 55ஆவது இடத்தை வகிக்கும் இவர், பிரெஞ் ஓப்பனில் முதல் சுற்றுடன் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

இத்தோல்வியின் பிரதிபலிப்பே அவர் ஓய்வுபெறக் காரணம் என விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# அவுஸ்ரேலிய அணியில் இடம்பிடிக்க சுழற்பந்து வீச்சாளர்களிடையே போட்டி

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியில் இடம்பிடிக்கும் சுழற்பந்து வீச்சாளர்களுக்கிடையில் போட்டி நிலை ஒன்று உருவாகியுள்ளதாக ஸ்மித் தெரிவித்தார்.

கணுக்கால் உபாதையில் இருந்து மீண்டிருக்கும் ஸ்மித் அநேகமாக ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு எதிரான டெஸ்ட்தொடரில் விளையாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுழற்பந்து வீச்சாளர்களுக்கு நிறைய உதவி புரியும் அணித் தலைவர்களில் கிளார்க் முதன்மையானவர். இதற்கு ஷேன் வோர்னுடன் இணைந்து அவரது நுட்பங்களை அறிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்று கூறுவார். சுழற்பந்து வீச்சாளர்கள் பந்து வீசும்போது எ வ ் வாறு களத்தடுப்பை மாற்றியமைப்பது என்பது பற்றியும் கிளார்க் மிகுந்த தெளிவுடன் இருக்கிறார். இது பந்து வீச்சாளர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையளிக்கும்.

சுழற்பந்து வீச்சாளர்களான நேதன் ஹூரிட்ஸ், மைக்கல் பீர் மற்றும் ஜேசன் கிரேஜா உட்பட பலர் நல்ல உடற்தகுதியுடன் இருப்பதால் யாரை அணியில் இணைப்பது என்ற நெருக்கடி கிரிக்கெட் சபைக்கு உண்டு.

காலஞ்சென்ற ரெஜென்னாவிடம் இருந்து சுழற்பந்து வீச்சுத் தொடர்பான பல நுட்பங்களை நான் கற்றுக் கொண்டேன். எனது பந்து வீச்சுப் பாணியை வெற்றிகரமாக மாற்றியவர் அவரே. பந்து வீசவரும்போது வேகத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும். பந்து வீசும் கையின் தோள்பட்டைப் பகுதியைச் சிறிது உயர்த்துவதன் மூலம் பந்தினைச் சரியாக வீச முடியும் எனத் தெரிவித்தவர் அவரே என்றார்.

# அப்ரிடி நீக்கத்திற்கு வேறு காரணமுண்டு

(லாகூர்)

அப்ரிடி நீக்கப்பட்டது சரியான முடிவே. அவர் அணித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கு வேறு காரணங்களும் உண்டு. அதை நேரம் வரும்போது தெரிவிப்பேன் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ்பட் தெரிவித்தார்.

மிஸ்பா உல்-ஹக் சிறப்பான முறையில் அணியை வழிநடத்தி வருகின்றார். வீரர்களுடன் இணைந்து அணியை வழிநடத்துகின்றார். இவர் போன்ற வீரர்களே அணியை வழிநடத்த எதிர்காலத்தில் தேவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அப்ரிடி அணித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கு பெரும் அதிர்வலைகள் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலையில், இஜாஸ்பட்டின் இக்கூற்று மேலும் சிக்கல்களை உருவாக்கியுள்ளதாக பாகிஸ்தானிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மேற்கிந்திய அணி மீண்டெழும் கால் கூப்பர் நம்புகின்றார்

திறமையான இளம் வீரர்கள் அணியில் இடம் பிடித் திருப்பதால் விரைவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி மீண்டெழும் என அதன் முன்னாள் தலைவர் கால் கூப்பர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இப்போது மேற்கிந்தியத்தீவுகள் அணி சரியான திசையில் சென்று கொண்டிருக்கின்றது. ஏராளமான இளம் வீரர்கள் கிரிக்கெட்டை ஆர்வமாக விளையாடி வருகின்றனர். அவர்களுக்கு சரியான வகையில் பயிற்சி அளித்தால் மீண்டும் பழைய நிலையைத் தொட முடியும்.

நான் சில காலம் கிரிக்கெட்டை விட்டு ஒதுங்கியிருந்ததால், தொலைக்காட்சிகளில் மட்டுமே கிரிக்கெட்டை பார்த்துவந்தேன். தற்போது வீரர்கள் அருகில் இருந்து அவர்களின் திறமையைப் பார்த்து வருகின்றேன்

இதில் கிரிக்கெட் சபை முக்கியமானது. கிரிக் கெட் சபை பாரபட்சமின்றி செயற்பட்டால்தான் வீரர்கள் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடமுடியும். கிரிக்கெட்டை மேம் படுத்த வேண்டுமாயின் மேற்கிந் தியத்தீவுகளின் கிரிக்கெட் சபை அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். இதற்கு நானும் ஒத்துழைப்பேன் என்றார்.



# சூழ்நிலைக்கு ஏற்ப செயற்படும் மனோபாவம் கொண்டவன்

சூழ்நிலைக்கு ஏற்ப செயற்படுகின்ற மனோபாவம் கொண்டவன் நான். அதுதான் எனது மிகப் பெரிய பலம் என தமிழக வீரர் அபினவ் முகுந்த் தெரிவித்தார். மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான தொடரில் தேசிய அணியில் இடம்கிடைத்ததையிட்டு கருத்து வெளியிட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கம்பீருக்குப் பதிலாக நான் இடம்பெறுவேன் என்று நிறையப் பேச்சு அடிபட்டது. எனது மனதிலும் அப்படித்தான் தோன்றியது. கடந்த இரண்டு ஆண்டுகளாக உள்ளூர் போட்டிகளில் நான் சிறப்பாக விளையாடி வருகிறேன். அவற்றினைத் தேர்வுக் குழுவினர் கவனித்து, எனக்கு வாய்ப்பு அளித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இது எனது உழைப்பிற்கு கிடைத்த பரிசு. சூழ்நிலைக்கு ஏற்ப செயற்படுகின்ற மனோபாவம் கொண்டவன் நான். அதுதான் எனது மிகப் பெரிய பலம் என்றார்.

# அயர்லாந்துடனான முதல் போட்டியில் பாகிஸ்தான் 7 விக்கெட்டுக்களால் வெற்றி

(பெல்பாஸ்ட்)

அயர்லாந்து அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

அயர்லாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் அயர்லாந்தின் பெல்பாஸ்ட் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. மழை காரணமாக 36 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இந்தப் போட்டியில், முதலில் ஆடிய அயர்லாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஸ்ரேலிஸ் 39, ஓ பிறைன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜுனெய்ட் கான் நான்கு, சயிட் அஜ்மல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 27.3 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மொகமட் ஹபீஸ் 52, தபீக் உமர் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜோன்ஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஜுனெய்ட் கான் தெரிவானார்.

# நான்காவது சுற்றுக்கு முன்னேற்றம்




பிரான்ஸ் தலைநகர் பரீஸில் நடைபெற்று வரும் பிரெஞ் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் ரபேல் நடால், ஜோகோவிச், ஆன்டி முர்ரே, நாலீ, அசரென்கா ஆகியோர் நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் ஸ்பெயினின் ர.ஃபேல் நடால் 6-1, 6-3, 6-0 என்ற நேர் செட்களில் குரேஷியாவின் அந்தோனியோ வெய்க்கையும், செர்பியாவின் நோவக் ஜோகோவிக் 6-3, 3-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ஆர்ஜென்டீனாவின் ஜுயன் மார்ட்டினையும் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

பிரிட்டனின் ஆன்டி முர்ரே 6-2, 6-3, 6-2 என்ற நேர் செட்களில் ஜெர்மனியின் மைக்கேல் பெரரையும், செர்பியாவின் விக்டர் டிராய்க்கி 6-4, 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் உக்ரைனின் அலெக்சாண்ட்ராவையும் வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினர்.

அசரென்கா வெற்றி: மகளிர் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் பெல்ஜியத்தின் விக்டோரியா அசரென்கா 6-3, 6-2 என்ற நேர் செட்களில் இத்தாலியின் ராபர்ட்டா வின்சியையும், சீனாவின் நாலீ 6-2, 6-2 என்ற நேர் செட்களில் ருமேனியாவின் கிறிஸ்டியாவையும் வீழ்த்தினர்.

இதேபோல் ரஷ்யாவின் மகரோவா 6-4, 7-5 என்ற நேர் செட்களில் எஸ்தோனியாவின் கனேபியையும், ஜெர்மனியின் ஆன்ட்ரியா பெட்கோவிக் 6-2, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் அவுஸ்ரேலியாவின் ஜமிலாவையும் வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினர்.

பயஸ் ஜோடி வெற்றி: கலப்பு இரட்டையர் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-செக்.குடியரசின் இவெட்டா பெனிசோவா ஜோடி 6-4, 7-6 (1) என்ற நேர் செட்களில் சீனதைபேயின் சியாஜுங்-போலந்தின் மார்சின் ஜோடியை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது.

# பயஸ்-பூபதி ஜோடி வெளியேறியது

(பரீஸ்)

பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-மகேஷ் பூபதி ஜோடி தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறியது.

சர்வதேச இரட்டையர் தரவரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ள பயஸ்-பூபதி ஜோடி 6-7, 4-6 என்ற நேர் செட் கணக்கில் அவுஸ்ரேலியாவின் ஸ்டீபன் ஹஸ்-ஆஸ்லே பிஷர் ஜோடியிடம் தோல்வி கண்டது.

இந்த ஆட்டம் 1 மணி நேரம் 32 நிமிடங்கள் நீடித்தது. இந்த ஆட்டத்தில் இரு ஜோடிகளும் அபாரமாக ஆடியது. இந்த ஆட்டத்தில் ஒருமுறை மட்டுமே சர்வீஸ் முறியடிக்கப்பட்டது. இரண்டாவது செட்டில் இந்திய வீரர்களின் சர்வீஸ முறியடித்தது அவுஸ்ரேலிய ஜோடி.

இத்தோல்வி மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், அடுத்து வரும் தொடர்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என பயஸ் ஜோடி தெரிவித்தது.

# ரோற் இரட்டைச் சத ஆட்டத்தில் இங்கிலாந்து வலுவான நிலையில்



இலங்கைக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் இடம்பெறுகின்ற ரெஸ்ட் போட்டியில் 4ஆவது நாளான நேற்று இங்கிலாந்து முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுக்கள் இழந்து, 465 ஓட்டங்கள் பெற்ற நிலையில், ரோற் (203), பெல் (91) ஆகியோரின் இணைப் பாட்டம் தொடர்கிறது. இதில் கொக் 133, ஸ்ரொஸ் 20 அன்டர் சன் 01, பீட்டர்சன் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். இப்போட்டியில் இங்கிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.

# ஐரோப்பிய சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது பார்சிலோனா



சம்பியன் லீக் கிண்ணத்தை பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

நேற்று முன்தினம் இரவு இங்கிலாந்தின் வெம்பிளி மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் பார்சிலோனா அணியும் மான்செஸ்ரர் யுனைட்டட் அணியும் மோதிக் கொண்டன.

ஐரோப்பிய பிரிமியர் லீக் இறுதியாட்டத்தில் நான்காவது முறையாக கிண்ணத்தை வெல்லும் என்றும் உள்நாட்டில் தனது பத்தொன்பதாவது கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கையுடனும் மான்செஸ்ரர் யுனைட்டட் களமிறங்கியது.

ஆனால், பார்சிலோனாவின் கைகளில் சிக்கி இவ்வாறு 3-1 என்ற கசப்பான அனுபவம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் என்று யுனைட்டட் நினைத்துக்கூடப் பார்த்திருக்கவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன் ரோமில் நடைபெற்ற இறுதியாட்டத்தின் அனுபவங்களைக் கொண்டு இந்த முறை அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்றும் நம்பப்பட்டது.

ஆனால், லயனல் மெஸ்ஸி ஊடறுத்துச் சென்று எல்லாவற்றையும் குழப்பிவிட்டார். இதனையே கடந்த இறுதி ஆட்டத்திலும் செய்தார் என்று யுனைட்டட் பயிற்சியாளர் பேர்குசன் தெரிவித்தார்.

மான்செஸ்ரர் யுனைட்டட், பார்சிலோனாவை பணியவைக்க மிக வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ஆனால், பார்சலோனா தமது மென்மையான பாசிங்கின் மூலம் யுனைட்டட்டை உலுப்பியது மட்டுமன்றி, யுனைட்டட் எதுவித கட்டுப்பாட்டையும் செயற்படுத்த முடியாதபடி செய்துவிட்டது.

இறுதியில் 3-1 என்ற கோல் கணக்கில் பார்சலோனா கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.


# இன்று ஆரம்பம்

(காரைநகர் நிருபர்)

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.


மல்லாவி மகாவித்தியாலய மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவப்பிரகாசம் கலந்து கொள்ளவுள்ளார். வலய மட்டப் போட்டிகளில் வெற்றி யீட்டியவர்கள் முல்லைத்தீவு மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (10)



யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மாணவன் க. டிலக்சன் 13 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டதைப் பாராட்டி வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. இவ் வெற்றிக் கிண்ணத்தை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை வழங்கினார். (10)

# த்ரில் வெற்றிபெற்றது சென் பற்றிக்ஸ் கல்லூரி




(யாழ்ப்பாணம்)

கண்டி தர்மராசா கல்லூரிக்கு எதிரான போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி த்ரில் வெற்றிபெற்றது. கண்டி தர்மராசா கல்லூரி அணிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான 35 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்து. இதற்கமைய களமிறங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 74, கிளின்டன் 50 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அரவிந்த 27 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு ஆடிய கண்டி தர்மராசாக் கல்லூரி அணி 35 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்று, 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் சசிதன், நுவான் ஆகியோர் தலா 60 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எரிக் 37 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (20)

# தீவக வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. அதன் தொடர்ச்சி வருமாறு:

**4x100 மீற்றர் அஞ்சலோட்டம்**

டாக்.தியாகராசா ம.ம.வி, வேலணை மத்திய கல்லூரி, சென்.மேரிஸ் ஆர்.சி. மகளிர் வித்தி.

**4x400 மீற்றர் அஞ்சலோட்டம்**

வேலணை மத்திய கல்லூரி, டாக். தியாகராசா ம.ம.வி, நாரந்தனை ஆர்.சி. மகா வித்தி.

**நீளம் பாய்தல்**

ஆர்.கீர்த்திகா (மண்டைதீவு ம.வி), என். தர்சிகா (எழுவைதீவு முருகவேல் வித்தி), பி.கோபிகா (டாக்.தியாகராசா ம.ம.வி).

**உயரம் பாய்தல்**

எஸ்.ரம்சி (கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி), எஸ்.ரதீஸ்வரி (யாழ்ற்றன் கல்லூரி), வி.டேமியா (நெடுந்தீவு ஆர்.சி மகளிர் கல்லூரி).

**குண்டெறிதல்**

எஸ்.அருள்மொழி (நெடுந்தீவு ம.வி), கே. தயாளினி (நெடுந்தீவு ம.வி), எஸ். கௌசிகா (வேலணை மேற்கு நடராஜா வித்தி).

**தட்டெறிதல்**

டி.பிறிசில்டா (அனலைதீவு சதாசிவம் ம.வி), ஆர்.டொறினா (புங்குடுதீவு சுப்பிரமணிய மகா வித்தி), எஸ்.சுலக்சனா (அனலைதீவு சதாசிவம் ம.வி).

**ஈட்டியெறிதல்**

சி.மேரிசயந்தா (நெடுந்தீவு சிகிரியாம்பிள்ளை ஜி.ரி.எம்.எஸ்.), ஆர்.டொறினா (புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி), எஸ்.சிரோமி (கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி).

**17 வயதுக்குட்பட்ட பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

எஸ்.பிரணவி (வேலணை மத்திய கல்லூரி), கே.ஜெயப்பிரியா (சென்.மேரிஸ் ஆர்.சி.வித்தி), கே.விதுஷா (வேலணை கிழக்கு ம.வி).

**200 மீற்றர் ஓட்டம்**

எஸ்.பிரணவி (வேலணை மத்திய கல்லூரி), எஸ்.திருமகள் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி), கே.ஜெயப்பிரியா (சென்.மேரிஸ் ஆர்.சி.மகளிர் வித்தி).

**400 மீற்றர் ஓட்டம்**

எஸ்.திருமகள் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி), பி.இன்பராணி (டாக்.தியாகராசா ம.ம.வி), யு.கௌரிகா (வேலணை மேற்கு நடராசா வித்தி).

**800 மீற்றர் ஓட்டம்**

எஸ்.திருமகள் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி), ரி.பிரியா (சென்.மேரிஸ் ஆர்.சி.மகளிர் வித்தி), ஏ.மேரி வினு (நெடுந்தீவு ம.வி).

**1500 மீற்றர் ஓட்டம்**

ஏ.மேரிவினு (நெடுந்தீவு ம.வி), எம். டினோசியகலா (நெடுந்தீவு ம.வி), எஸ். மதுனி (நயினாதீவு சிறிகணேசா ம.வி).

(தொடரும்)

# ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் சனல் - 4 இன் காணொளிப்பதிவு அறிக்கை

(கொழும்பு)

சனல் - 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான தமிழ்க் கைதிகளை படையினர் சுட்டுக்கொல்லும் காட்சிகள் அடங்கிய காணொளிப்பதிவு அறிக்கை இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நீதிக்குப் புறம்பான, தன்னிச்சையான படுகொலைகள் குறித்த ஐ.நாவின் சிறப்பு அறிக்கையிலேயே இந்தக் காணொளிப் பதிவு மற்றும் அது தொடர்பான தொழில்நுட்ப பரிசோதனை அறிக்கையும் உள்ளடக்கப்படவுள்ளன.

இந்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் குறித்த ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ்ரோ ஹெய்ன்ஸ் சமர்ப்பிக்கவுள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இந்தக் காணொளியின் பதிவு போலியானது என்று இலங்கை அரசாங்கம் கூறி வருகிறது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளராக கிறிஸ்ரோ ஹெய்ன்ஸ் நியமிக்கப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கும் முதலாவது அறிக்கை இதுவாகும்.

இவர் கடந்த ஆண்டு இலங்கை வருவதற்கு முற்பட்டபோது இலங்கை அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது.

இவருக்கு முன்னர் சிறப்பு அறிக்கையாளராக இருந்த பிலிப் அஸ்ரன் கடைசியாக 2005ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்தார்.

அதற்கு பின்னர் அவருக்கும் இலங்கை வர அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

## ஐ.நா. செயலரே முடிவெடுப்பாராம்

கொழும்பு)

இலங்கை தொடர்பான போர்க்குற்ற அறிக்கையின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனே முடிவு செய்யவேண்டும் என்று ஐ.நா.பொதுச்சபையின் தலைவர் ஜோசப் டீஸ் தெரிவித்தார்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக அடுத்து என்ன செய்வதென்று தன்னால் முடிவு செய்ய முடியாது என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் கூறியிருந்தார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் சுதந்திரமான விசாரணைக்குழுவை நியமிக்க தனக்கு அதிகாரம் இல்லை என்று ஐ.நா. பொதுச்சபை அல்லது மனித உரிமைகள் பேரவை அல்லது பாதுகாப்புச் சபை கோரினால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தன்னால் தீர்மானிக்க முடியும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச்சபைத் தலைவர் ஜோசப் டீசிடம் இன்னர்சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியிருந்தது.

இதற்குப் பதிலளித்துள்ள அவர், இந்த விவகாரத்தை ஐ.நா.பொதுச்செயலரே கையாள்கிறார் என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில் ஐ.நா. பொதுச்செயலரும், பொதுச்சபையின் தலைவரும் இந்த விவகாரத்தில் இருந்து நழுவிச் செல்லவே முனைவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

# கைதிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

சிறைக் கைதிகளின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடி உடனடித்தீர்வு வழங்கும் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

கைதிகளை நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அண்மையில் அமைச்சு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இதன்பின்னர் எதிர்வரும் 31ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் சகல கைதிகளையும் சந்தித்து அவர்களின பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் விசாரணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கைதிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

விசாரணைக் குழுவின் சிபாரிசுகளின் பிரகாரம் நீதிபதிகள், சட்ட மா அதிபர் மற்றும் நீதிஅமைச்சர் ஆகிய மூவராலும் இணக்கம் காணப்படாத தீர்மானங்கள் குறித்து செயற்பட வேண்டியவிதம் தொடர்பான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# உலகில் உதவிகளற்று கைவிடப்பட்ட இனமாக இலங்கைத் தமிழர் உள்ளதைக் கண்டேன்

## பேராசிரியர் சூரியநாராயணன் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாலாவது ஈழப்போரில் தமிழ் மக்களை இந்திய அரசு குறிப்பாக தமிழக அரசு காப்பாற்ற முற்படவில்லை என்ற கவலைகள் ஈழத்தமிழ் மக்களின் மனங்களில் பதிந்துள்ளது. உலகில் உதவிகள் அற்று கைவிடப்பட்ட இனமாக தமது இனம் இருக்கின்றது என்ற ஏக்கங்களை அவர்களின் கண்களில் கண்டுகொண்டேன் என இந்தியாவைத் தளமாகக் கொண்ட தென் ஆசிய ஆய்வுக்குழு என்ற இணையத்தளத்தில் எழுதியுள்ள ஆய்வுப் பத்தியில் பேராசிரியர் சூரியநாராயணன் தெரிவித்துள்ளார்.**

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு மேற்கொள்ளும் விசாரணைகள் அனைத்துலக தரத்தைக் கொண்டிருக்கப் போவதில்லை என ஐ.நா.நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. படை நடவடிக்கை மனிதாபிமான நடவடிக்கை என்பதையும் அங்கு பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்ற இலங்கை அரசின் வாதங்களையும் ஐ.நா. அறிக்கை நிராகரித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அனைத்துலக நடவடிக்கைகள் தேவை எனவும், 2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் எனவும் ஐ.நாவின் அறிக்கையில் பரிந்துரைகள் முன்வைக்கப்டுள்ளன. பந்து தற்போது ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கைகளில் உள்ளது. அவர் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போகின்றார். சக்திவாய்ந்த நாடுகளின் ஆதரவுகளை எவ்வாறு திரட்டப்போகின்றார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 26 - 27 ஆம் நாட்களில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 11ஆவது அமர்வுகளின் இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவுகளை வழங்கியிருந்தன. ஆனால் இந்தமுறை இலங்கையை காப்பாற்ற இந்தியா முற்படக்கூடாது என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் ஜனவரி மாதம் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். அங்கு புத்திஜீவிகள்,மாணவர்கள்,அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசியல் வாதிகள்,சாதாரண பொதுமக்கள் ஆகியவர்களை சந்தித்தேன்.

நாலாவது ஈழப்போரில் தமிழ் மக்களை இந்திய அரசு, குறிப்பாக தமிழக அரசு காப்பாற்ற முற்படவில்லை என்ற கவலைகள் அவர்களின் மனங்களில் பதிந்துள்ளது. உலகில் உதவிகள் அற்று கைவிடப்பட்ட இனமாக தமது இனம் இருக்கின்றது என்ற ஏக்கங்களை அவர்களின் கண்களில் காண்டுகொண்டேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிபுணர்குழு அறிக்கை குறித்து சீனாவிடமிருந்து உறுதியான வாக்குறுதியைப் பெறமுடியவில்லை

## என்கிறது கொழும்பு வார இதழ்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் சீனப் பயணத்தின் போது கூட்டறிக்கை ஒன்றை வெளியிட முடியாது போனலும், ஐ.நாவின் நிபுணர்குழு அறிக்கை தொடர்பாக சீனாவிடம் இருந்து தெளிவான வாக்குறுதியைப் பெறமுடியாது போயுள்ளதும் அரசாங்கத்தை பெரிதும் கவலையடையச் செய்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில வாரஇதழ் ஒன்றின் அரசியல் விவகாரப் பத்தியில் கூறப்பட்டுள்ளது.

புதுடில்லிப் பயணத்தின் பின்னடைவை அடுத்து, இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கடந்த வாரம் சீனா சென்றிருந்தார்.

பீஜிங்கில் அவருக்கு அதிகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆனால் பேச்சுக்களின் பின்னர் கூட்டுகையோ அல்லது அறிக்கையோ வெளியிடப்படவில்லை.

வெளிவிவகார அமைச்சின் சார்பில் பீரிஸ் கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிடப் பணித்திருந்தார்.

இந்தியாவுக்கு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் எவரையும் பீரிஸ் அழைத்துச் செல்லவில்லை.

இந்திய - இலங்கை உறவுகள் குறித்த முக்கியமான தருணத்தில் பேச்சுகளுக்குச் செல்லும்போது வெளிவிவகார அமைச்சர் உதவியாளர் இன்றி சென்றது இதுவே முதல்முறை.

ஆனால் பீஜிங் சென்றபோது அவர் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியான சோபினி குணசேகரவை அழைத்துச் சென்றிருந்தார். இவர் முன்னர் பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றியவர்.

சீன வெளிவிவகார அமைச்சர் யங் ஜீச்சியை சந்தித்த பின்னர் கொழும்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அது சீனாவுடன் சேர்ந்து பீரிஸ் கூட்டறிகை ஒன்றை வெளியிட முடியாமல் போனதை வெளிப்படுத்தியது.

அப்படியான கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தால் அது மிகவும் கனதியானதாக இருந்திருக்கும்.

மிகவும் முக்கியமான இந்த விவகாரத்தில் சீனாவிடம் இருந்து உறுதியானதொரு வாக்குறுதியை பீரிஸ் பெற முடியாது போயுள்ளது அரசாங்கத்தை கவலையடையச் செய்துள்ளது.

சீனா சின்குவா செய்தி நிறுவனம் இந்தப் பேச்சுக்கள் குறித்து வெளியிட்ட அறிக்கை, பீரிஸ் வெளியிட்ட அறிக்கையை விட சற்று வேறுபாடானதாகவே இருந்தது.

பேச்சுக்கள் தொடர்பான சீன வெளிவிவகார அமைச்சு அறிக்கை எதையும் வெளியிடாத சந்தர்ப்பங்களில் சின்குவா செய்தி நிறுவனம் வெளியிடும் செய்தியையே அரசியல் மற்றும் இராஜதந்திர ஆய்வாளர்கள் சீனாவின் அதிகாரபூர்வ கருத்தாக எடுத்துக் கொள்கின்றனர்.

பீரிஸ் சந்திப்புக்குப் பின்னர் சின்குவா வெளியிட்ட செய்தியில், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட ஐ.நாவின் அறிக்கை பற்றி குறிப்பிடப்படவில்லை.

பீரிஸ் கூறியது போல இந்த அறிக்கை பற்றி கலந்துரையாடப்பட்டி ருந்தால், சீனா எதற்காக இந்த விவகாரம் பற்றி தொடர்ந்தும் மௌனமாக இருக்கிறதென்பது மர்மாகவுள்ளது என்றும் கொழும்பு ஆங்கில வார இதழ் தெரி வித்துள்ளது.

# நாட்டை விட்டு வெளியேறியுள்ள மேர்வின்



(கொழும்பு)

சோதிடர்கள் கூறியதற்கு அமைய அமைச்சர் மேர்வின் சில்வா நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார்.


அவர் ஏற்கனவே தமக்கு ஆறு மாதங்களுக்கு சரியில்லை என கூறி வெளிநாடு ஒன்றுக்கு சென்றிருந்தார்.

எனினும் இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற சிங்கள திரைப்படம் ஒன்றில் சிங்கள மன்னனான துட்கைமுனுவாக நடிப்பதற்காக அவர் மீண்டும் இலங்கை திரும்பியிருந்தார்.

திரைப்படம் ஒலிப்பதிவு செய்துக் கொண்டிருந்த போது திடீரென யானை ஒன்று தாக்க முற்பட்ட வேளையில் அவரது பாதுகாவளர்களால் மீட்கப்பட்டார் மேர்வின்.

இந்த நிலையில் ஜோதிடர் கூறியது போல தமக்கு நேரம் சரியில்லை என கருதி இத்தாலிக்கு சென்றுள்ளார்

**தரப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. 


A, B, C, D, E, F ஆகிய ஆறு நகரங்களை இணைக்கும் பாதைகள் கீழே உருவப்படத்தின் மூலம் தரப்பட்டுள்ளன. அவற்றில் D எனும் நகரத்திலிருந்து E நகரத்தினூடாக F எனும் நகரம் வரைக்குமான தூரம் யாது?

1.8 km    2. 17 km    3. 14 km

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

31. அசுத்தமான நீரைப் பருகுவது தடுக்கப்படல் வேண்டும். அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
   1. அசுத்தமான நீர் சுவை குறைந்தது என்பதால் ஆகும்
   2. நோய்கள் பரவும் என்பதால் ஆகும்
   3. அசுத்தமான நீர்த் தட்டுப்பாடு என்பதால் ஆகும்

32. இலங்கை ஒரு தீவு ஆகும். அவ்வாறு கூறப்படுவது.
   1. இலங்கையைச் சுற்றிக் கடல் இருப்பதனால் ஆகும்
   2. இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் ஆகும்
   3. இலங்கை மாங்காய் வடிவில் அமைந்திருப்பதனால் ஆகும்

33. இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் வேண்டும். அதற்குக் காரணம்
   1. பல் துலக்கிய பின் நன்கு தூங்கலாம் என்பதால் ஆகும்
   2. பல் பாதுகாக்கப்படும் என்பதால் ஆகும்
   3. பற்கள் சக்தி பெறுகின்றன என்பதால் ஆகும்

34. மாணவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் வாசிப்பது சிறந்த ஓர் பழக்கமாகும். காரணம்.
   1. புத்தகங்கள் வாசிப்பதனால் அறிவு விருத்தியடையும் என்பதால் ஆகும்
   2. புத்தகங்கள் விலை குறைவு என்பதனால் ஆகும்
   3. ஆசிரியர்களும் புத்தகங்களையே வாசிக்கின்றார்கள் என்பதனால் ஆகும்

35. 0.001, 0.01, 0.1, 0.0001 இவைகளில் பெரிய எண்
   1. 0.001    2. 0.01    3. 0.1


36. நூறாயிரத்துப் பதினைந்து இதனை இலக்கத்தில் எழுதுக.
   1. 10015    2. 100015    3. 1500000

**பின்வரும் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**

37.
   1. வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கின்றது.
   2. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்
   3. புடோலங்காய் ஒரு வகைக் காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றது.

38.
   1. நாய் வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது
   2. காகம் ஒரு பறவை. அது தாவர உண்ணி
   3. மனிதன் இரண்டு கால் விலங்கு. அவன் முலையூட்டிக்குரியவன்


**இப்படங்களில் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டுகிற விடையின் கீழ்க் கோடிடுக.**

39. 

A    B    C    D

1)BACD
2)ACBD
3)BCDA
4)ACDB

40. மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால், முகம் கழுவி ஆயத்தமாகிப் பாடசாலை சென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?




1) 2, 5, 3, 4, 1    2) 2, 4, 1, 3, 5    3) 4, 3, 5, 1, 2



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்


# கல்விமுரசு

வெளியீடு 16




இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே முதலில் தரப்பட்டுள்ள உருவப்படத்துடன் தொடர்புடைய உருவப் படத்தை அதற்கெதிரே தரப்பட்டுள்ள உருவப் படங்களிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

01. 

① ② ③

02. 

1    2    3

**பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

03. அதிகாலையில் சேவல் கூவுவது.
   1. தூங்குபவர்களை எழுப்புவதற்காக
   2. இருள் மறைந்து ஒளி வரப்போவதை உணர்த்துவதற்காக
   3. தனது இறக்கைகளை அடிக்க வேண்டுமென்பதற்காக

04. ‘கடி நாய் கவனம்’ என்பது ஒரு
   1. கட்டளை    2. வேண்டுகோள்    3. ஆபத்தைக் குறிக்கும் வாக்கியம்

05. எனது வயது 36. எனது அம்மாவின் வயது எனது வயதின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவாகுமெனின், நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
   1. 30    2. 34    3. 36

06. அஜித் என்பவன் சஜித் என்பவனையும்விட இரு டொபிகள் அதிகமாகவும், ரஜித் என்பவனையும் விட நான்கு டொபிகள் அதிகமாகவும் வைத்துள்ளான். அஜித்திடம் 10 டொபிகள் இருப்பின் மூவரிடமும் உள்ள டொபிகள்.
   1. 12    2. 24    3. 36

07. தேங்காயின் விலை அதிகரிக்கின்றமைக்கான காரணம்.
   1. தென்னை மரங்களுக்கு உரம் போடாமை
   2. தென்னங் காணிகள் பெருமளவில் விற்கப்படுதல்
   3. தென்னை உற்பத்தி குறைவது

08. ரமணியின் வயது ரூபினியின் வயதின் அரைவாசியாகும். ரூபினியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினது வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனில், தர்சினிக்கு எத்தனை வயது?
   1. 15    2. 18    3. 20

09. ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும் போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறுபக்கத்திலிருந்து கணக்கிடும்போது அவள் ஆறாவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்.
   1. 18    2. 19    3. 21


10. வரட்சியான காலங்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பிற்கான காரணம்.
   1. அக்காலங்களில் மரக்கறிகளின் உற்பத்தி மிகக் குறைவு என்பதால்
   2. விவசாயிகள் அக்காலங்களில் மரக்கறி உற்பத்தியை விரும்பாததால்
   3. அக்காலங்களில் போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லாமையால்


11. மண்ணரிப்பு உள்ள இடங்களில் தாவரங்கள் நன்கு வளராமைக்கான காரணம்.
   1. அவ்வகையான இடங்களில் நீர் அதிகம் தேங்கி நிற்பதால்
   2. தாவரங்கள் வளர்வதற்குப் பொருத்தமான மண் அத்தகைய இடங்களில் இல்லாமையால்
   3. தாவரங்கள் வளர்வதற்குத் தேவையான மண்ணானது ஓடும் நீருடன் அடித்துச் செல்லப்படுவதால்

12. எங்கள் ஊரிலுள்ள அனேகமான வீடுகள் ஓடுகளினால் வேயப்பட்டிருந்தன எனின், இதிலிருந்து கூறக்கூடியது.
   1. எங்கள் ஊரிலுள்ளவர்களில் அனேகமானவர்கள் செல்வந்தர்கள்
   2. ஓடுகளினால் வேய்வது மற்றையவைகளையும் விட இலாபமானது
   3. ஓடு போடப்படாத வீடுகளும் எங்கள் ஊரில் உள்ளன.

13. டானியல் என்பவர் கார் விபத்து ஒன்றில் இறந்துவிட்டார் எனின், இதிலிருந்து கூறக்கூடியது.
   1. கார்ச் சாரதி மதுபோதையில் வண்டியை ஓட்டியிருப்பார்
   2. கார் வேகமா வந்து டானியலை மோதியிருக்கலாம்
   3. டானியல் பாதை ஓரமாக அவதானத்துடன் நடந்து சென்றிருப்பார்.

14. வயற் காட்டிலிருந்த மாடுகள் எல்லாம் தங்களது வால்களால் ஈக்களைத் தாக்கின எனின், இதிலிருந்து கூறக்கூடியது.
   1. வயற்காட்டிலிருந்த எல்லா மாடுகளுக்கும் ஈக்களைத் தாக்கக் கூடியளவிற்கு நீண்ட வால் இருந்திருக்கும்
   2. ஈக்களைத் தாக்குவது மாடுகளின் பொழுது போக்காகும்.
   3. ஈக்கள் மாடுகளுக்குக் கொடுத்த தொந்தரவாலேயே அவ்வாறு தாக்கியிருக்கலாம்

15.

① ② ③

16.

① ② ③

**17ஆம், 18ஆம் வினாக்களில் முதலில் அமைந்துள்ள வாக்கியத்தின் அதே கருத்தைக் கொடுக்கக்கூடிய விடையை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**


17. மலையைப் பார்த்து நாய் எவ்வளவுதான் குரைத்தாலும் மலை ஒருபோதும் சரியாது.
   1. மலை நாயையும் விடச் சக்தி வாய்ந்தது
   2. மலை ஒருபோதும் சரியாது
   3. கெட்டவர்களுடைய தீய வார்த்தைகளால் நல்லவர்களை ஏமாற்ற முடியாது

18. ஆற்றில் நீரைக் குடித்துவிட்டு கடலுக்கு நன்றி சொல்லுதல்
   1. ஆற்று நீரானது கடலிலிருந்தே பெறப்படுகின்றது
   2. ஒருவரிடமிருந்து உதவியைப் பெற்றுவிட்டு வேறொருவருக்கு நன்றி கூறுதல்
   3. கடல் நீரை ஒருபோதும் குடிக்க முடியாது

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**


19.

சதுரமுகி வடிவிலமைந்துள்ள இப்பெட்டியை விரிக்கும்போது தோன்றக் கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?








20.


எல்லாப் பக்கங்களும் சமனாக அமைந்திருந்த காட்போட் பெட்டி ஒன்றை விரித்தபோது அது அருகேயுள்ளவாறு இருந்தது எனின், அப்பெட்டியின் உயரம் என்ன?
   1. 12 cm   3. 24 cm   3. 6 cm

**மாணவர்கள் சிலர் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகள் குறியீடுகளால் தரப்பட்டிருப்பதுடன், அவற்றின் மொத்தப் புள்ளிகளும் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி அதன் கீழ்க் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| பெயர் | 1ஆவது படம் | 2ஆவது படம் | 3ஆவது படம் | 4ஆவது படம் | 5ஆவது படம் | பெற்ற மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| சமன் | □ | □ | □ | △ | △ | 400 |
| தாரகா | △ | △ | △ | △ | △ | ............... |
| நளாயினி | □ | △ | ○ | ○ | ○ | 375 |
| விமல் | □ | □ | ○ | ○ | △ | ............... |
| றமணி | □ | □ | □ | □ | □ | 500 |

21. தாரகா பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
   1. 250   2. 200   3. 300
22. றமணி பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும், விமல் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?
   1. 300   2. 200   3. 100
23. 5 மாணவர்களும் சேர்ந்த அதிகூடிய புள்ளியைப் பெற்றது எப்பாடத்தில்?
   1. 2ஆம் பாடம்   2. 1ஆம் பாடம்   3. 3ஆம் பாடம்
24. ஐந்து பேரும் சேர்ந்து, ஐந்து பாடங்களிலும் பெற்றுள்ள மொத்தப் புள்ளிகள் எத்தனை?
   1. 1850   2. 1900   3. 1925

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

25. நீர்வீழ்ச்சி ஒன்றில் காண முடியாதது.
   1. நீர் மேலிருந்து கீழ்நோக்கி விழுதல்   2. படகுகள் செல்லும் காட்சி
   3. கற்களின் மேல் நீர் விழுதல்   4. கண்ணைக் கவரும் காட்சி
26. புதிதாகப் பிறந்த குழந்தையிடம் இல்லாதது.
   1. சிவப்பு நிறமான தோல்   2. தலை நிறைய முடி
   3. சிறு பற்கள்   4. நன்றாகப் பார்க்கக்கூடிய கண்கள்
27. மலர்களில் இல்லாதது
   1. விதம் விதமான வடிவங்கள்   2. பல்வேறுபட்ட இதழ்கள்
   3. நீண்ட தண்டு   4. பல்வேறுபட்ட நிறங்கள்

**கீழே முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தானது பிழையாக அமைந்திருப்பதற்குரிய காரணத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

28. வெளிச்சமற்ற காட்டு வழியாகத் தடுமாறியபடி பயணம் செய்து கொண்டிருந்த தாத்தா தனது சட்டப் பையிலிருந்த மூக்குக் கண்ணாடியைப் போட்டவுடன் ஒழுங்காக நடந்து சென்றார்.
   1. மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாலும் இருட்டில் பயணம் செய்ய முடியாது
   2. இருட்டில் சட்டைப் பையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுக்க முடியாது
   3. கண்ணாடி இருந்திருந்தால் பயண ஆரம்பத்திலேயே அவர் அதை அணிந்திருப்பார்.

**முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் அதே கருத்தைத் தரக்கூடிய வாக்கியத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

29. திருடுவதில் ஆர்வமுடைய பிரணவன் குடிப் பழக்கமுடைய சிங்காரத்துடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டான்.
   1. ஜாடிக்கேற்ற மூடியைப் போல
   2. வேப்பிலை மரத்தில் பாகற்கொடி படர்ந்திருந்ததைப் போல
   3. கெடுவான் கேடு நினைப்பான் என்பதைப் போல

## இனம் காத்த சேவல்




ஒரு சேவல் நரியை கொலை செய்தது என்றால் நம்பு வீர்களா? நம்பித்தான் ஆகவேண்டும். காரணம் உண்மையில் இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றுள்ளது சவுதி அரேபியா விலுள்ள ஒரு பண்ணையில் நுழைந்த நரியை பதம் பார்த்துள்ளது அங்குள்ள சேவல். தனது இனத்தைக் காப்பாற்ற சுமார் 4 மணிநேர நேரடி சண்டைக்குப்பின்னர் வெற்றியும் கண்டுள்ளது இந்த வீரச்சேவல். இதன் பின்னர் நரியின் கழுத்தில் ஏற்பட்ட கீறல் காரணமாக நரி இறந்துள்ளது. சேவலுக்கும் இன்னொரு சேவலுக்கும் சண்டை வந்ததை ஆடுகளம் படத்திலும் பார்த்திருக்கிறோம். நரிக்கும் சேவலுக்கும் சண்டை வந்து வீரத்தில் வென்ற சேவல் இதுதான்.

## நம்பலாமா?

மனிதக்குழந்தை ஒன்று நாய்க்குப் பிறந்து இருக்கின்றது என்று சொல்கின்ற போது யாராவது நம்புவீர்களா? ஆனால் உக்ரையின் நாட்டில் 2007ஆம் ஆண்டு நாய் ஒன்று ஐந்து குட்டிகளையும், ஒரு மனிதக் குழந்தையையும் பிரசவித்து இருக்கின்றது.



## இவர் ஒரு மின்கலம்



இந்த உலகத்திலேயே உயிருள்ள பற்றறியாக செயல்படக் கூடிய ஒரே ஒரு நபர் சேர்வியா நாட்டைச் சேர்ந்த சிலவிசா பச்கிக். இவரது உடலுக்கு மின்சாரத்தை தாங்குகின்ற அபூர்வ சக்தி உள்ளது.

இதனால் இவரால் மின்சாரமாக செயற்பட முடிகின்றது.

இவர் இச்சிறப்பு இயல்பை 17 ஆவது வயதில் முதன் முதல் அறிந்து கொண்டார். இவருக்கும் மின்சாரத்துக்கும் இடையிலான தொடர்பு கின்னஸ் சாதனையாக மலர்ந்து உள்ளது.

## ஆரோக்கியத்திற்கான ஆடைகள்



ஐரோப்பிய தொழில் நுட்ப ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத திருக்கும் இந்த ஆடைகள் சாதாரணமாக நாம் பயன்படுத்தும் அலங்கார ஆடைகளோ அல்லது ஆடம்பர ஆடைகளோ அல்ல. இவை மின்னணு சென்சர்கள் கொண்ட ஆடைகள். இவற்றை அணிபவர்களின் ஆரோக்கியத்தை இந்த மின்னணு சென்சர் ஆடைகள் தொடர்ந்து கண் காணிக்கும் என்பது தான் இவற்றின் சிறப்பு.


சென்சர்கள் :

உணர்திறன் ஆடைகள் எனப்படும் இந்த இன்டலி ஜெண்ட் டெக்ஸ்டைல்ஸ், பல எம்பிடட் சென்சார் களைக் கொண்டிருக்கும். இவற்றின் துணையுடன் உடலில் நடக்கும் நீரோட்டத்தை, அதாவது ரத்தம், வியர்வை ஓட்டத்தின் மாற்றங்களைத் தொடர்ந்து கண் காணித்து, உடல் ஆரோக்கியத்தை கணிக்கும் வகையில் இவை அமைக்கப்பட்டு இருக்கின்றன. மருத்துவமனை நோயாளிகளில் குறிப்பாக கோமா நிலையில் இருப்பவர்கள், மனநலம் குன்றியவர்களின் உள்ளார்ந்த மாற்றங்களைக் கவனிக்க இந்த நவீன ஆடைகள் மிகவும் பயன்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

மனதின் எண்ணங்களுக்கு ஏற்ப உடல் ரத்த ஓட்டம் மாறுபடுவதால், குற்றவாளிகளின் எண்ணங்களை ஆராய குற்றவியல் காவல்துறையினருக்கும் இந்த உணர்திறன் ஆடைகள் மிகுந்த பயனளிக்கும் என்று கூறப்படுகிறது.

## உப்பில் உணவு விடுதி





உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது எம் அனைவருக்கும் தெரிந்த பழமொழி. ஆனால் உப்பினாலேயே ஒரு ஹோட்டல் செய்து எம் உள்ளங்களில் நினைக்கும் அளவுக்கு சாதனை படைக்கப்பட்டுள்ளது உங்களுக்கு தெரியுமா?. 1993 ஆம் ஆண்டு ஹோட்டல் கட்டப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் மேசைகள் கதிரைகள் உட்பட அனைத்தும் உப்புக்கட்டிகளால் ஆனவை. 15 படுக்கையறைகளை கொண்ட இந்த ஹோட்டல் சுற்றுலா பயணிகளை பெரிதும் கவர்ந்துள்ளது. சுவர்கள் அனைத்தும் கற்களால் கட்டப்பட்டுள்ளது. இந்த ஹோட்டல் பொலிவியாவிலுள்ள உலகின் மிகப்பெரிய உப்பு பாலை வனப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் மீண்டும் கற்களால் அமைக்கப்பட்டு சீமேந்து பூசப்படுகிறது. இங்கு நீச்சல் தடாகமும் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

## இலகுவாக மீட்பதற்கு

பாதிக்கப்பட்டுள்ள மைக்ரோசொப்ட் வேர்டு, எக்ஸல், பவர்பாயிண்ட் கோப்புகளை பாதுகாப்பாக Text கோப்புகளாக மாற்றி மீட்கலாம். நமக்கு உதவுவதற்காக ஒரு மென்பொருள் உள்ளது.

சில சமயங்களில் நம்மிடம் இருக்கும் ஓபிஸ் கோப்புகள் ஏதாவது பிரச்சினை காரணமாக திறக்காமல் இருக்கும். இப்படி இருக்கும் கோப்புகளில் இருக்கும் தகவல்களை நமக்கு எளிதாக மீட்டு கொடுப்பதற்காக Corrupt office2txt என்ற இலவச மென் பொருள் உள்ளது.


இத்தளத்திற்கு சென்று Download Link என்று கொடுக்கப் பட்டிருக்கும் இணைப்பை சொடுக்கி மென்பொருளை நம் கணினியில் எளிதாக தரவிறக்கலாம். தரவிறக்கிய மென் பொருளை நம் கணினியில் நிறுவி இயக்கியதும் File என்பதை சொடுக்கி Open என்பதை தேர்ந்தெடுத்து பாதிக்கப் பட்டுள்ள கோப்பை தேர்ந்தெடுக்கவும்.

உடனடியாக பாதிக்கப்பட்டுள்ள கோப்புகளில் உள்ள Content நமக்கு Text ContentMf Recover செய்து மாற்றி கொடுக்கப்படும். doc, docx, xls, xlsx, ppt, pptx, odt, ods, and odp போன்ற போர்மட்களுக்கு துணைபுரியும் வண்ணம் இந்த இலவச மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டு சரியாக தெரியாமல் இருக்கும் ஓபிஸ் கோப்புகளை திறப்பதற்கு இந்த மென்பொருள் உபயோகம் உள்ளதாக இருக்கும்.

தரவிறக்க சுட்டி
http://godskingsandheroes.info/software/

## கணினி பிரச்சினைக்குத் தீர்வு




**ஒரே தளம் அனைத்து கணினி பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்கிறது. பிழை உதவி இதை தான் மையமாக வைத்து இந்தத் தளம் செயற்படுகிறது. மற்ற தளங்களைப் போல அல்லாமல் பிரச்சினையை நாம் கூறினால் போதும் அதற்கான தீர்வை இலவசமாக தேடிக் கொடுக்கின்றது.**

**அதற்காகவே அமைக்கப்பட்ட தளம் இது. இணைய முகவரி இதில் அழுத்துவதன் மூலம் இணையத்தளத்துக்கு செல்லலாம்.**

## அழிப்பதில் பிரச்சினையா?




உங்கள் கணினி மென்பொருள்களை அழிப்பதில் பிரச்சினையா, அதற்கு ஒரு மென்பொருள் உள்ளது Revo Uninstaller Delete Problem Applications With Free Revo Uninstaller

தரவிறக்க சுட்டி
http://www.errorhelp.com/

கணினி மூலை

# குருபெயர்ச்சி மாற்றம் கூடாதாம் வெள்ளைக்கு மாறிய கருணாநிதி



(சென்னை)

குருபெயர்ச்சி சாதகமில்லாமல் போனதால், மஞ்சள் நிறத்தில் இருந்து, அடிக்கடி வெள்ளைத் துண்டுக்கு கருணாநிதி மாறி வருகிறார். ஆரம்பம் முதல் கறுப்புத் துண்டு அணிந்த கருணாநிதி, ஐந்தாண்டுகளுக்கு மேலாக மஞ்சள் துண்டுக்கு மாறினார். கழுத்துப் பகுதியில் அதிக வலி ஏற்படுவதால், கனமான மஞசள் துண்டு அணிந்தால் கழுத்து பகுதியில் வெப்பம் ஏற்படும்.

வலியை அது கட்டுப் படுத்தும் என, மருத்துவர்கள் ஆலோசனைப்படி துண்டு மாற்றம் நடந்தது" என தி.மு.க தரப்பில் கூறப்பட்டது.

தேர்தலில் தி.மு.க. படுதோல்வி, கனிமொழி கைது, ஸ்பெக்ட்ரம் பிரச்சினையால் குழப்பம் எனப் பல தோல்விகளுக்கு இடையே, கடந்த சில நாட்களாக, கருணாநிதி மஞ்சள் துண்டை தவிர்த்து, அடிக்கடி வெள்ளைத் துண்டு அணிந்து வருகிறார்.

சட்டசபைத் தேர்தல் முடிவுக்குப் பின்னரும், கனிமொழி கைது செய்யப்பட்ட பின்பும் டெல்லிப் பயணத்தின் போதும் கருணாநிதி வெள்ளைத்துண்டு அணிந்திருந்தார்.

இதுபற்றி ஜோதிடர்கள் சிலர் கூறியதாவது,

மஞ்சள் துண்டு குருபலத்துக்காக அணிவது. மே 8 ஆம் திகதி நடந்த குருபெயர்ச்சி கருணாநிதிக்கு சாதகமாக இல்லை. குரு பகவான், 12 இல் உள்ளார். இந்தச் சூழலில் அவர் மஞ்சள் நிறத்துண்டு அணியாமல், வெள்ளைத் துண்டு அணிந்தால் அது அவருக்கு அமைதியை தரும்.

வெள்ளை நிறம் பொதுவாக சந்திரன், சூரியன், சுக்கிரன் ஆகிய ராசிகளுக்கானது. குருவின் பலவீனத்தைக் குறைத்து, அமைதி தரும் என்பதால் இம்மாற்றம் நடந்துள்ளது. அடுத்தாண்டு மே மாதம் நடக்கும் குருபெயர்ச்சி வரை, அவர் வெள்ளைத் துண்டு அணிந்து, அதற்கான பரிகாரத்தை அவரோ அல்லது அவரது குடும்பத்தாரோ மேற்கொண்டால், அவருக்கு மன அமைதி ஏற்படும். அதனால்தான் கருணாநிதி அடிக்கடி வெள்ளை துண்டுக்கு மாறி, மீண்டும் மஞ்சள் துண்டு அணிகிறார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்தியச் செய்திகள்

# சிக்கப்பூர் சென்ற நடிகர் ரஜினிகாந் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதி



(சிங்கப்பூர்)

சிறுநீரகக் கோளாறுக்கு சிகிச்சை பெற சென்னையில் இருந்து சிங்கப்பூர் சென்ற நடிகர் ரஜினிகாந்த் அங்குள்ள மவுன்ட் எலிசபெத் மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரது நிலை சீராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நடிகர் தனுஷை மேற்கோள்காட்டி சனல் நியூஸ் ஏசியா இதுகுறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

சுவாசக் கோளாறு உள்ளிட்ட பிரச்சினைகளுக்காக முதலில் சென்னையில் இசபெல்லா மருத்துவமனையிலும், பின்னர் ராமச்சந்திரா மருத்துவமனையிலும் ரஜினிகாந்த் சிகிச்சை பெற்றார். தொடரந்து சிறுநீரகக் கோளாறுக்கு நவீன சிகிச்சை பெறுவதற்காக ராமச்சந்திரா மருத்துவமனையில் இருந்து அவர் சிங்கப்பூர் சென்றார். அவருடன் அவரது 2 மகள்களும், மருமகன் தனுஷும் உடன் சென்றனர்.

சிங்கப்பூரில் மவுன்ட் எலிசபெத் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில ரஜினிகாந்த் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரஜினிகாந்தின் உடல்நிலை குறித்து ஊடகங்களிடம் பேச தனுஷ் மறுத்து விட்டார். எனினும் அவரது உடல்நிலை சீராக இருப்பதாக மட்டும் தெரிவித்தார்.

ரஜினிகாந்தின் உடல்நிலை குறித்து மருத்துவமனை நிர்வாகமும் தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டது என அந்தச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

# தமிழக மக்கள் மௌனப் புரட்சி மூலம் ஜனநாயகத்திற்கு மகுடம் சூட்டியுள்ளனர்

## ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோ. பெருமிதம்

(சென்னை)

தற்போது பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க அரசு நல்லது செய்தால் ஆதரிப்போம். தவறு செய்தால் கண்டிக்கத் தயங்கமாட்டோம் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ பேசினார். ம.தி.மு.கவின் 18 ஆவது ஆண்டு தொடக்க விழா நேற்று முன்தினம் மாலை சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ,

நாங்கள் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்திருக்கிறோம். அவ்வாறு சேர்ந்ததால் நான் மதிப்பிழந்திருக்கிறேன். மரியாதை இழந்திருக்கிறேன். பரிகாசத்துக்கு ஆளாகியிருக்கிறேன். அவ்வாறு கூட்டணி சேர்ந்ததை நான் நியாயப்படுத்த விரும்பவில்லை. எனினும் நாம் அழித்து ஒழிக்கப்படக்கூடிய நிலை வரும்போது தற்காலிகமாக, சமரசம் செய்துக்கொள்வதில் தவறில்லை என பகத்சிங் கூறியிருக்கிறார்.

எங்களுக்கும் அத்தகைய சூழ்நிலை வந்தபோதுதான் தற்காலிகமாக சமரசம் செய்துகொள்ள கூட்டணி வைத்தோம். முன்பு அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்த போது நாங்கள் பணத்துக்காக சேர்ந்தோம் என வீண்பழி சுமத்தப்பட்டோம். ஆனால் கடந்த தேர்தலில் பங்கேற்கப் போவதில்லை என்ற எங்கள் முடிவின் மூலம் அந்தப் பழி துடைக்கப்பட்டிருக்கிறது.

ம.தி.மு.க வளர்வதும் வலிமை பெறுவதும் தமிழகத்துக்கும் தமிழகத்தின் எதிர்காலத்திற்கும் நல்லது. எனவே தமிழக மக்கள் எங்களை ஆதரிக்க வேண்டும். ம.தி.மு.க மிகப்பெரிய அரசியல் சக்தியாக உருவெடுக்கும். தமிழகத்தின் அரசியல் அதிகாரம் ஒரு நாள் எங்களுக்கும் வரும்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் பெரும் மௌனப் புரட்சி செய்து ஜனநாயகத்துக்கு மகுடம் சூட்டியிருக்கிறார்கள். தற்போது பொறுப்பேற்றுள்ள அதிமுக அரசு நல்லது செய்தால் ஆதரிப்போம். தவறு செய்தால் கண்டிக்கத் தயங்க மாட்டோம் என்றார்.

# பாகிஸ்தானுடனான உறவை பலப்படுத்துவதற்கு பயங்கரவாத முகாம்களை அழிக்க வேண்டும்

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி தெரிவிப்பு

(கண்ணூர்)



பாகிஸ்தானில் செயற்படும் பயங்கரவாத முகாம்களை அழிக்காமல், இந்தியா - பாகிஸ்தான் உறவுகளில் நிரந்தர ஒத்துழைப்பு ஏற்படாது என பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

பாகிஸ்தானில் 42 இற்கும் மேற்பட்ட பயங்கரவாத முகாம்கள் செயல்படுவது, இந்தியாவுக்கு மிகுந்த மன வருத்தம் அளிக்கிறது. இவற்றை அழிக்காமல், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான உறவில், நிரந்தர ஒத்துழைப்பு ஏற்படாது. எனினும், வரும் 30, 31 ஆம் திகதிகளில் இருநாட்டு பாதுகாப்புச் செயலர்களும் சந்தித்து பேசவுள்ளனர். பாகிஸ்தான் அரசுடன் நட்புறவை பேணும நோக்கில்தான் இதுபோன்ற பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன. பேச்சுவார்த்தை இல்லாமல் ஏதும் செய்ய இயலாது. அண்டை நாடுகள் அனைத்து டனும் நல்லதொரு நட்புறவையே இந்தியா விரும்புகிறது. நண்பர்களை நாம் மாற்றிக் கொள்ளலாம் அண்டை நாட்டுக்காரர்களை மாற்றிட முடியாது. அண்டை நாடுகளுடன் சேர்ந்து வாழ வேண்டியதன் யதார்த்தத்தை இந்தியா உணர்ந்துள்ளது. அவர்களுடன் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், அவற்றைச் சரிசெய்து, நட்புறவை பலப்படுத்தவே இந்தியா முயற்சிக்கிறது.

சீனாவுடனான எல்லைப் பிரச்சினையில் நிரந்தர தீர்வுகாண, தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில காலமாக நிறுத்தப்பட்டுள்ள இந்தியா - சீனா இடையிலான ராணுவ ஒத்துழைப்பை மீண்டும் தொடர முயற்சித்து வருகிறோம். ஜூன் மாதத்தில், இந்திய ராணுவ அதிகாரிகள் சீனாவிற்கு, சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றனர். அமெரிக்காவின் அனைத்து செயல்களையும் சரி என, இந்தியா சொல்லாது.

பயங்கரவாதத்தை அழிக்க பாகிஸ்தான் ராணுவத்திற்கு அமெரிக்கா வழங்கும் பெருமளவிலான ஆயுதங்கள், இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்தப்படுவதை கவனிக்க வேண்டும். இதுகுறித்து, ஏற்கனவே அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது இவ்வாறு அந்தோணி கூறினார்.


# ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேடு; தயாநிதி மாறனுக்கும் தொடர்பு

(புதுடெல்லி)

ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனும் முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் இதன் மூலம் ரூ. 700 கோடி கைமாறியதாகவும் தெகல்கா இணையத்தளம் தெரிவித்துள்ளது. இதுபற்றி அவரிடம் சி.பி.ஐ. விரைவில் விசாரணை நடத்த விருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ரூ.22 ஆயிரம் கோடி மதிப்பிலான அலைவரிசையை தயாநிதி மாறன் ரூ. ஆயிரத்து 400 கோடிக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்ததாகவும் இதன் காரணமாக அவருக்கு ரூ.700 கோடி கைமாறியதாகவும் தெகல்கா இணையத்தளம் தெரிவித்துள்ளது. ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டில் பிரதமரின் ஆலோசனைகளை ராசா புறக்கணித்தார். சட்டம் மற்றும் நிதி அமைச்சகங்களின் ஆலோசனைகளையும் ராசா புறக்கணித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேபோல் தயாநிதிமாறனும் பிரதமரின் ஆலோசனைக் குழுவை புறக்கணித்ததாகவும் தெகல்கா இணையத்தளம் கூறுகிறது. மேலும் அலைவரிசை ஒதுக்கீட்டில் அவர் முறைகேடு செய்ததற்கு வலுவான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. சி.பி.ஐ. விசாரித்த பிறகு இந்த விவகாரத்தில் பல பூதாகரமான தகவல்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க எம்.எல்.ஏ. வானமனோகரன் மரக்கறி வியாபார நிலையத்திற்குச் சென்று தனது வெற்றிக்கு ஆதரவளித்தவருக்கு நன்றி தெரிவிப்பதைக் காணலாம்.

உலகச் செய்திகள்

# பின்லேடன் தங்கியிருந்த வீட்டில் சி.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை

(இஸ்லாமாபாத்)

அல்-கொய்தா தலைவர் ஒசமா பின்லேடன் கொல்லப்பட்ட இடத்தில், முக்கிய தடயங்கள் ஏதேனும் உள்ளனவா என அமெரிக்க புலனாய்வுத் துறை (சி.ஐ.ஏ.) அதிகாரிகள் சோதனை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன், பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில், சமீபத்தில் அமெரிக்க கொமாண்டோ படையினரால் கொல்லப்பட்டார். அந்த இடத்தில் முக்கியமான தடயங்கள் ஏதேனும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அமெரிக்க அரசுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து, அமெரிக்க புலனாய்வு அமைப்பில்



உள்ள தடயவியல் நிபுணர்கள், ஒசாமா கொல்லப்பட்ட வீட்டில் சோதனை நடத்தியதாக வும், இந்தச் சோதனை ஆறு மணி நேரம் நீடித்ததாகவும், பாகிஸ்தான் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க அதிகாரிகள் நடத்திய இந்த சோதனையின் போது, பத்திரிகையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை என்றும், அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இருந்தாலும், இதுதொடர்பான அதிகாரபூர்வமான செய்தி எதுவும் வெளியிடப்படவில்லை.

# விண்ணுக்குத் திரும்புகிறது "எண்டீவர்" விண்கலம்

(ஹுஸ்டன்)


அமெரிக்காவின் நாசாவிஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்ட எண்டீவர் விண்கலம் எதிர்வரும் முதலாம் திகதி பூமிக்குத் திரும்பவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் சர்வதேச விண்வெளி மையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஆய்வு கூடம் அமைக்கும் பணி நடை பெற்று வருகிறது. அதில் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் அமெரிக்காவில் உள்ள நாசா விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ள எண்டீவர் விண்கலம் மூலம் சென்று வருகின்றனர். இந்நிலையில் கடந்த 16ஆம் திகதி அமெரிக்காவை சேர்ந்த ரான் காரான், ரஷ்யாவை சேர்ந்த அலெக்சாண்டர் சமோ குட்யாவ், அண்ட்ரே போரி சென்கோ ஆகிய 3 பேர் சென்றனர்.

இந்நிலையில் சர்வதேச விண் வெளிக்கு சென்ற எண்டீவர் விண்கலம், 2 வாரத்துக்கு பிறகு வருகிற முதலாம் திகதி பூமிக்கு திரும்புகிறது. அதில் சமீபத்தில் அங்கு சென்ற 3 விண்வெளி வீரர்களும் மற்றும் அங்கு தங்கியுள்ள 6 விண்வெளி வீரர்களும் பயணம் செய்கின்றனர்.

எண்டீவர் விண்கலம் இதுவரை 24 தடவை தனது பயணத்தை மேற்கொண் டுள்ளது. சமீபத்தில் 25 ஆவது முறையாக விண்வெளிக்குச் சென்றுள் ளது. பூமிக்குத்திரும்பவுள்ள இந்த விண்கலத்தின் கடைசிப் பயணம் இதுதான் எனவும் நாசா அறிவித்துள்ளது.



# நாடுகளால் எடுக்கப்படும் புள்ளிவிபரங்கள் சரியாக அமைவதில்லை என்கிறது "ரைம்ஸ்"

(வொஷிங்கடன்)

ஒரு நாட்டில் எடுக்கப்படும் புள்ளி விபரங்கள் சரியான தகவலாக அமைவதில்லையென அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'ரைம்ஸ்' சஞ்சிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இந்தியாவில் 30 கோடி நடுத்தர வர்க்கத்தினர் வாழ்கின்றனர். இது தவறு. உண்மையில், 2005இல் சர்வதேச நிறுவனமான 'மெக்கின்சே' எடுத்த கணக்கெடுப்பின்படி, 5 கோடி பேர்தான். 2015இல் இத்தொகை 25 கோடியை எட்டும். ஆனால் 30 கோடி நடுத்தர வர்க்கத்தினர் தற்போது இந்தியாவில் இருப்பதாகக் கூறப்பட்ட இந்தப் புள்ளி விவரத்தை ஐ.நா.,வில் இருந்து அமெரிக்க அதிபர் வரை கூறியுள்ளனர். கடந்த 2005 இல், அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்தியா வந்த போது "30 கோடி நடுத்தர வர்க்கத்தினர் உள்ள இந்தியா" என்று குறிப்பிட்டார். இந்தியா என்றைக்காவது ஒருநாள் 30 கோடி என்ற எண்ணிக்கையைத் தொடத் தான் போகிறது. "மெக்கின்சே" தற்போது, நடுத்தர வர்க்கத்திற்கான அடையாளமான ஆண்டுக்கு 1,96, 920 (4,376 டொலர்) சம்பாதிக்க வேண்டும் என்று கணக்கிட்டுள்ளது. ஆனால் இந்தியா, 30 கோடி பேர் நடுத்தர வர்க்கத்தினர் என்ற இலக்கை அடையும் போது, இந்தியாவின் 78 சதவீதம் பேர் 'மெக்கின்சே'யின் இலக்கை விடக் குறைவாகவே சம் பாதிக்க நேரிடலாம்.

கடந்த 1998-2002 காலகட்டத்தில் குடியரசு காங்கோவில் நிகழ்ந்த போரில், 54 லட்சம் பேர் பலியாகினர். இது 2ஆம் உலகப் போருக்குப் பின் நிகழ்ந்த போர்களில் மிக அதிகம். இதுவும் தவறு.

போரில் நேரடியாக ஈடுபடுவோரைத் தவிர, இடம் பெயர்தலால் ஏற்படும் பல்வேறு நோய்களால் இறப்பவர்களே அதிகம். அதுவும் காங்கோ போன்ற நாடுகளில் சுகாதாரம் என்பது மிகவும் மோசமான நிலையில்தான் உள்ளது. போரில் இறந்தோர் தொகையைக் கணக்கெடுப்பது மிகவும் சிரமமான பணி. எனினும், காங்கோ போரில் 10 லட்சம் முதல் 20 லட்சம் பேர் வரை இறந்திருக்கக் கூடும் என்று வேறு சில புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

தென் ஆபிரிக்காவில், 30 லட்சம் சிம்பாப்வே அகதிகள் உள்ளனர். இது தவறு. இப்புள்ளி விவரம் உலகம் முழுவதிலும் உள்ள பத்திரிகையாளர்கள், அரசுகளால் சிம்பாப்வேயின் பொருளாதார வீழ்ச்சியைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது. அகதிகளைக் கணக்கெடுப்பதில் சிறந்த அமைப்பான "தென் ஆபிரிக்க இடம்பெயர்தல் திட்டம்"என்ற அமைப்பு எடுத்த கணக்கெடுப்பின்படி, தென் ஆபிரிக்காவில், 8 லட்சத்தில் இருந்து 10 லட்சம் ஜிம்பாப்வே அகதிகள் உள்ளனர்.

சமீபத்தில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தத்தால், வளரும் நாடுகளில் 10 கோடி மக்கள் வறுமையில் தள்ளப்படுவர். இது ஒரு ஊகமே. உண்மை நிலைவரம் அல்ல. இந்த ஊகத்தை உலக வங்கி, ஐ.நா., ஐ.எம்.எப். என அனைத்தும் அங்கீகரித்துள்ளன. ஆனால், பொருளாதார மந்தம் என்பது பணக்கார நாடுகளில் மட்டுமே ஏற்பட்டது. பொருளாதார மந்தத்தால் ஆபிரிக்காவில் உள்நாட்டுப் போர் மற்றும் நாடுகளுக்கிடையிலான போர் வரும் என்பது, ஐ.எம்.எப்.,பின் முன்னாள் தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ்கானின் கணிப்பு. ஆனால், அது பொய்த்துவிட்டது. அங்கு தென் ஆபிரிக்காவில் மட்டுமே பொருளாதார மந்தம் ஏற்பட்டது. பிற நாடுகளின் பொருளா தாரம் ஏறுமுகத்தில்தான் உள்ளது.

பத்து அமெரிக்கர்களில் ஒருவரிடம் மட்டுமே பாஸ்போர்ட் இருக்கும். இது உண்மையல்ல. கடைசியாக எடுத்த புள்ளி விவரப்படி, மொத்த அமெரிக்க மக்கள் தொகையில், 37 சதவீதம் பேரிடம் பாஸ்போர்ட் உள்ளது.

பிரிட்டனில் 71 சதவீதம் பேரிடம் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்காவில் பாஸ்போர்ட் எடுப்போர் தொகை அதிகரித்துள்ளது.

உலகில் மிக அதிகளவு வெளிநாடுகளுக்குச் செல்லும் நாட்டினர் பட்டியலில், பிரிட்டிஷ் மக்கள் ஜெர்மானியர்களை அடுத்து மூன்றாவது இடத்தில் அமெரிக்கர்கள் உள்ளனர். ஆனால், சீனாவில் 1.5 சதவீதம் பேர் மட்டுமே பாஸ்போர்ட் வைத்துள்ளனர். இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இணையச்சேவையை முடக்கிய முபாரக்கிற்கு அபராதம் விதிப்பு

இணையச் சேவையை முடக்கியமைக்காக எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கிற்கு 34 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சி இடம்பெற்ற காலத்தில் இணையத் தொடர்பாடல் சேவையை ஜனாதிபதி முபாரக் முடக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 83 வயதான முபாரக் தற்போது வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களின் போது இடம்பெற்ற உயிரிழப்புச் சம்பவங்களுக்கு எதிராகவும் ஹொஸ்னி முபாரக் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஹொஸ்னி முபாரக் ஆட்சியில் அங்கம் வகித்த 20 அமைச்சர்களும், சில வர்த்தகப் பிரமுகர்களும் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டுவருகின்றனர்.



லிபியாவில் இடம்பெற்று வரும் மோதல்களின் தொடர்ச்சியாக மிஸ்ரா விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லிபிய அரசுக்குச் சொந்தமான விமானங்கள் கிளர்ச்சிப் படைகளின் தாக்குதலினால் எரிந்து உருக்குலைந்துள்ளதனைக் காணலாம்.

# மண்டைஓடு கண்டுபிடிப்பு

இத்தாலியில் மோனாலிசா மொடல் அழகியின் மண்டை ஓடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாறாத புன்னகை சிந்தும் மோனாலிசாவின் ஓவியத்தை லியோனார்டோ டா வின்ஸ்சி என்ற ஓவியர் வரைந்தார். இந்தப் படத்தை வரைய பிரபல கோடீஸ்வரரும் பட்டு வியாபாரியுமான பிரான்சிஸ்கோ டெல் ஜியோகாண்டோவின் மனைவி லிசா கிரார்டினி மொடலாக இருந்தார்.

கடந்த 1542ஆம் ஆண்டு ஜூலை மாதம் தனது 63ஆவது வயதில் .மரணம் அடைந்தார். அவரது கல்லறை புளோரென்ஸ் நகரில் உள்ளது. அதை இத்தாலியின் பொலோக்னா பல்கலைக்கழக அகழ்வியல் ஆராய்ச்சியாளர்கள் தோண்டினர். அதில் இருந்து, ஒரு பெண்ணின் மண்டை ஓடும், இடுப்பு எலும்பும் கண்டெடுக்கப்பட்டது. அவை அநேகமாக மோனாலிசா படம் வரைய மொடலாக இருந்த லிசா கெரார் டினியினுடையதாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# இலங்கைக்கு முக்கியம் சீனா அல்ல, இந்தியாவே!

கலாநிதி
பாக்கியசோதி சரவணமுத்து

போருக்குப் பிந்திய ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பின்வரும் கட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் இந்திய விஜயத்தை அடுத்து வெளியிடப்பட்ட இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டறிக்கை இலங்கையைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்தது.

எங்களில் சிலருக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் இலங்கைக்கு அதிமுக்கிய இருபக்க உறவு இந்தியாவுடனானதாகும். சீனா மிக முக்கியமானதுதான். ஆனால் இந்திய உறவு அச்சாணி போன்றது. அதுவும் சர்வதேச அரங்கைப் பொறுத்தவரை இந்தியாவின் திசை காட்டலை நம்பியிருக்கும் தென் கோள நாடுகளின் நட்பு நமக்குத் தேவை.

எனவே கூட்டறிக்கை நுணுக்கமாக ஆராயப்பட வேண்டியது - இலங்கை அரசு என்ன செய்தது, என்ன செய்யப் போகிறது என்பதற்காக அல்ல, டில்லி முக்கியமென்று கருதி எதற்கு அழுத்தம் கொடுத்துள்ளது என்ற நோக்கில். கவனிக்கப்படவேண்டியது என்னவெனில், நிபுணர் குழுவின் அறிக்கை பற்றியோ பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு பற்றியோ அதில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 'மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கப்படுதல், துரித நடவடிக்கை எடுத்தல்' பற்றிய குறிப்பு உண்டு. அமைச்சர் பீரிஸ் இக் கூட்டறிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்து சமிக்ஞை கிடைக்காமல் ஒப்புதலளித்திருப்பார் என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாது.

எனவே, இக்கூட்டறிக்கையில் அமைச்சருக்கு எந்த அளவு பொறுப்பிருக்கிறதோ அதேயளவு பொறுப்பு ஜனாதிபதிக்குமுண்டு. உண்மையில் நிபுணர் குழுவின் அறிக்கை ஏற்படுத்தியிருக்கக்கூடிய பாதகமான விளைவுகளைச் சமநிலைப் படுத்துவதற்கு அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை கூட்டறிக்கை உள்ளடக்கியுள்ளது என்பது மிகையாகாது.

2011 ஆம் ஆண்டு 2009 ஆம் ஆண்டல்ல. 2009 இல் இந்தியா, மனித உரிமைகள் அலையில் இலங்கையின் சார்பில் முன்னெடுப்புக்கள் செய்து, புலிகளை வீழ்த்துவதில் ராஜபக்ஷ அரசுக்கு முழு ஆதரவும் கொடுத்தது.

2011 இல் இலங்கைக்கு மிக நெருக்கமான நாடாக சீனா நோக்கப்பட்டு, சீன உதவி இந்தியா செய்துவரும் உதவியைவிட முக்கியமானது என முக்கியத்துவமும் பிரபல்யமும் தரப்படும் புதிய சூழலுக்கு டில்லி திடுக்கிட்டு விழித்துக் கொண்டுள்ளது.

சீனா கடன்களைத் தரும்போது இந்தியா நன்கொடைகள் வழங்கும் நிலையில் பாராட்டும் நன்றியறிதலும் முன்னவர்க்கே கிடைப்பது டில்லியை எரிச்சலூட்டவே செய்யும். மேலும் விரிவான பொருளாதார பங்காளர் உடன்படிக்கை (CEPA) தொடக்கம் சம்பூர் நிலக்கரி முன்னுற்பத்தி நிலையம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயற் திட்டங்கள், இந்திய மீனவர் எதிர்கொள்ளும் வன்முறை வரை தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் நிலுவையிலுள்ளன.

இவையெல்லாவற்றினூடும் ஓடும் சரடு யாதெனில் அசைவியக்கத்தைத் துரிதப்படுத்துவதற்கான அரசியல் அர்ப்பணிப்பேயாகும். CEPA வைப் பொறுத்தவரை அர்ப்பணிப்பு மட்டுமன்றி, கருத்தியல் தளத்திலும் சம்பந்தப்படுகிறது. CEPA பற்றிய காலங்கடத்தும் போக்குக்கு வடக்கேயுள்ள பெரியண்ணனால் விழுங்கப்பட்டு விடுவோம் என்ற சிங்கள தேசியவாதத்தின் புராதன அச்சந்தவிர வலுவான வேறு காரணமில்லை.

இந்நாட்டுக்கு CEPA ஆல் விளையக்கூடிய நன்மைகள் பற்றி உணர்ந்த அரசைச் சூழ்ந்திருக்கும் பலர் மௌனம் காப்பது, அதிகாரக்கட்டமைப்புக்குள் தம் சொந்தப் பாதுகாப்பின்மை கருதியா?


கொழும்பு பற்றி டில்லியினுடைய நோக்கு இனிமேல் சென்னையிலுள்ள ஜெயலலிதா அரசோடு அது கொண்டுள்ள உறவினால் நிர்ணயிக்கப்படும். இந்திய - இலங்கை சமன்பாட்டில் இலங்கையை ஒரு நெம்புகோலாகப் பயன்படுத்தி டில்லியோடு பேரம்பேசுவதில் உள்ள அனுகூலத்தை தமிழ்நாடு எப்பொழுதும் கருத்திற் கொள்ளும்.

இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் என்ற முரசை ஜெயலலிதா அதிகபட்சமாக ஆறுமாதம் அடிக்கக்கூடும். அதுவரை தமிழ்தேசியப் புனைவுகள் மற்றும் சிங்கள தேசிய அச்சங்கள் போல முழு அளவில் இல்லாவிடினும் டில்லியின் நிலைப்பாட்டில் அது பிரதிபலிக்கக் காணலாம்.

டில்லி தமிழ்நாட்டின் உணர்வுகளைக் கவனத்திற்கொள்ளுமாயினும், தன் கொள்கை ஒரு மாநில அரசால் நிர்ணயிக்கப்பட அனுமதிக்காது.

போருக்குப் பிந்திய கட்டத்துக்குள் நகருவதற்கு இலங்கைக்கு இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் என்றே டில்லி கருதுவதாகத் தெரிகிறது. அர்த்தமுள்ள ஐக்கியத்தையும் இணக்கப்பாட்டையும் எய்துவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டிய பொறுபபு இலங்கையைச் சார்ந்தது.

இதைச் செய்வதற்கு இலங்கைக்கு அவகாசம் கொடுக்கப்படவேண்டும். காலக்கெடு என்று எதுவும் விதிக்கப்படவில்லையாயினும் இதை காலவரையறையின்றி இழுத்தடிக்கலாம் என அர்த்தப்படுத்தக்கூடாது. அர்த்தமுள்ள இணக்கப்பாடு மற்றும் ஐக்கியம் என்ற கட்டத்துள் மாற்றத்தை ஏற்படுத்துவதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்பதை இலங்கை வெளிக்காட்ட வேண்டும். இது நிகழாதவிடத்து, சர்வதேச நெருக்குதல் உள்ளிட்ட மாற்று வழிகள் பிரயோகிக்கப்படலாம்.



இலங்கைத் தரப்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத விடத்து, அல்லது நிபுணர்குழுவின் அறிக்கைக்குச் செய்யப்படுவது போல் வேகத்தடுப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்று இதை நோக்கலாம். அதாவது முடிவுகள் அல்லது பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதிலோ, அவை பற்றிய துரித அமுலாக்கலிலோ முனைப்புக் காட்டாமை. இந்தக் கூட்டறிக்கையில் நிபுணர்குழுவின் அறிக்கை பற்றியோ பொறுப்புக்கூறல் பற்றியோ குறிப்பிடாது விட்டது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமே மனித உரிமைமீறல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதும் சர்வதேச சமூகமும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புக்களும் கோரும் குறைந்த பட்ச அடிப்படைகளை வழங்குவதற்கு ராஜபக்ஷ அரசுக்கு இது நல்லதொரு வாய்ப்பு.

மனித உரிமை மீறல்கள் நிபுணர் குழுவின் அறிக்கை ஆகியவற்றுக்கப்பால், டில்லி விடாப்பிடியாக முன்னெடுக்கும் அரசியல் தீர்வு என்ற விடயமும் உண்டு.

இது தொடர்பில் '13 ஆம் திருத்தத்திலிருந்து கட்டியெழுப்புதல்' என்ற சொற்றொடர் 13 ஆம் திருத்தத்துக்கு மேலாக என்ற வாய்ப்பாட்டில் நம்பிக்கை ஏற்படுத்துகிறது. அத்துடன் அமுல் செய்யப்படாத பிரிவுகளாகிய நிலம் மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பற்றியவற்றையும் உள்ளடக்குகிறது. 'கட்டியெழுப்புதல்' என்ற தொடக்கப் புள்ளி மாகாணங்களுக்கு ஏற்கனவே பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைக் குறிக்குமேயன்றி, முக்கிய பணிக்குப் புறம்பான மேலானவையைக் குறிக்காது, அது விளிம்பு நிலைக்குரியது. நடை முறையில் இறங்கவேண்டும் என்பதே செய்தி. அனைத்துக் கட்சிகள் அவை போன்ற திசை திருப்புதல்களால் சாந்தி செய்ய முனைவது அரசும் அதன் கூட்டாளிகளும் தம்மைத் தாமே ஏமாற்றுவதாகத்தான் முடியும்.

கூட்டறிக்கைக்குப் பின்புலமே நிபுணர் குழுவின் அறிக்கைதான். அஃதோர் ஊக்கி. வெறும் சர்க்கஸ்களும் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் பற்றிய கூப்பாடுகளும், சனங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவலாம். 21 ஆம் நூற்றாண்டின் கோளமயப்பட்ட உலகைக் கட்டியாள முதிர்ச்சியுள்ள கொள்கை வகுப்பும் உறுதியான தீர்மானமெடுக்கும் ஆற்றலும் தேவை. தேசியத் தன்னாதிக்கம் என்பது தேசிய நலனிலும் ரஷ்யாவிலும் சீனாவிலும் தங்கியிருப்பதற்கு அப்பாற்பட்டது.

---

# கனிமொழி மாயை...



கலைஞர் கருணாநிதி தன் 43 ஆவது வயதில் முதன்முறையாக அமைச்சரானார். அதன் பிறகு தான் நிர்வாக முறைகேடுகள், ஊழல், லஞ்ச லாவண்யம், வழக்கு, கைது எல்லாம்... அவர் மகள் கனிமொழி தன் 43 ஆவது வயதில் ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் இருக்கிறார். இன்னும் அமைச்சர் பதவியைக்கூட அடையவில்லை. இதைத்தான் தமிழ் மரபில் தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாய்கிறது என்கிறார்களோ!

அரசியலுக்கு வந்த கருணாநிதியின் வாரிசுகளிலேயே ஆழமானவர், ஆபத்தானவர் கனிமொழிதான் என்று நான் அவர் பொது வாழ்க்கையில் நுழைந்த நாட்களிலிருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறேன். அழகிரியின் அதிரடிகள் பகிரங்கமானவை. எனவே எளிதில் அம்பலமாகிவிடக் கூடியவை. ஸ்டாலினுக்கு பொதுமக்களிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்ற ஆசை அவரை எப்போதும் எதிலும் அடக்கி வாசிக்கவே வைக்கிறது.

கனிமொழிதான் கருணாநிதியின் உண்மையான அரசியல் வாரிசு. தன் அரசியல் ரீதியான அவப்பெயர்களை யெல்லாம் மறைக்கும் முகமூடிகளாக ஆரம்பத்திலிருந்து கருணாநிதி தமிழையும் பகுத்தறிவையும் திறம்படக் கையாண்டு வந்திருக்கிறார். ஸ்டாலின், அழகிரி இருவரிடமும் அப்படி எந்த முகமூடியும் இல்லை. எதுவும் அவர்களுக்கு வசப்படவும் இல்லை.

கனிமொழியும் அப்பாவின் இலக்கிய முகமூடியையே தானும் அணிந்தவர். அப்பாவுக்கு சங்க காலம். மகளுக்கு சமகால கவிதை. கருணாநிதியின்எழுத்தை எப்படி ஒருபோதும் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, அசோக மித்திரன், பிரபஞ்சன் போன்றோரின் தரத்துக்கு நிகராக வைத்துப் பார்க்க முடியாதோ, அதே நிலைதான் கனிமொழியின் கவிதையும் அவரது சம காலக் கவிஞர்கள் பலரின் தரத்துக்குக் கிட்டவே நெருங்காதது.

அப்பாவின் இலக்கிய வாரிசாகவே தன்னை கனிமொழி முதலில் காட்டிக் கொண்டதால் அழகிரியும் ஸ்டாலினும் அவரைத் தங்களுக்குப் போட்டியாகக் கருதவில்லை. முரசொலி மாறனின் வாரிசாக தயாநிதி மாறன் அரசியலில் கொண்டு வரப்பட்ட பிறகு, மெல்ல மெல்ல கூடாரத்தில் மூக்கை நுழைத்த ஒட்டகமாக கனிமொழியும் நுழைவதை ஸ்டாலினும் அழகிரியும் தடுக்க முடியவில்லை. அவர்களின் ஆசியுடன் அரசியலில் தான் இருப்பதாக ஒரு பிரமையையும் கனிமொழி ஏற்படுத்தினார். ஸ்டாலினுக்கும் அழகிரிக்கும் இல்லாத ஒரு ஜாதி வளையமும் கனிமொழியின் உள்வட்டத்தில் இருந்தது.

எப்படி கருணாநிதி எப்போதும் மீடியாவுடன், பத்திரிகைகளுடன் (எவ்வளவு எரிந்து விழுந்தாலும் கடிந்துகொண்டாலும்) நட்புறவை விடாமல் வைத்துக் கொண்டே இருக்கிறாரோ அதே அணுகுமுறையை சென்னையிலும் டெல்லியிலும் கனிமொழியும் கையாண்டு வந்திருக்கி றாரா. அவரைப் பற்றிய சாதகமான செய்திகள், குறிப்பாக ஆங்கில மீடியாவில் வெளிவர, இந்த நட்பு பயன்பட்டிருக்கிறது. மாறன் சகோதரர்கள் கருணாநிதியின் உடல்நலத்தைப் பொருட்படுத் தாமல் அவரை தேர்தல வேலைக்காக சிகிச்சையை தள்ளிப் போடச் செய்வதைப் பற்றி ஆங்கில ஏடுகளுக்கு தகவல்கள், செய்திகள் கனிமொழி வட்டாரத்திலிருந்து தான் கசியவிடப்பட்டன.

ஸ்பெக்ட்ரம், ஆனைக்கும் அடிசறுக்கிய வாழைப்பழத் தோலாகிவிட்டது. அடுதடுத்து நடப்பவை கருணாநிதி யையும் கனிமொழியையும் மேலும் மேலும் அம்பலப் படுத்திக் கொண்டே இருக்கின்றன. பெண்ணியவாதி பிம்பம், ஜாமீனுக்காக கோர்ட்டில் வைக்கப்படும் மன்றாடலில் நொறுங்கிப் போய் விட்டது. பெண் என்பதால், தாய் என்பதால் கருணை காட்ட வேண்டும் என்று ராம் ஜெத்மலானி மன்றாடினார்.

இன்னும் சில வாதங்கள் படுவிசித்திரமானவை. நீதிமன்றத்தில் கண்ணியமாக நடந்து கொண்டதால், ஜாமீன் தரவேண்டுமாம். எந்தக் குற்றவாளிகளும் நீதிமன்றத்தில் ரகளை செய்வதில்லை. அமைதியாக இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல கண்ணியமாகத்தான் நடந்து கொள்வார்கள். மூன்று மாதமாக ராசா கூடத்தான் நீதிமன்றத்தில் கண்ணியமாக நடந்து கொள்கிறார்.

தன் கணவர் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால், கனிமொழி சென்னையில் பள்ளிக்குச் செல்லும் தன் மகனை கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பது இன்னொரு வாதம். அப்படியா னால் இத்தனை ஆண்டுகளாக எப்படி அவரால் டெல்லியில் எம்.பி.யாக இருகக முடிகிறது? சென்னையில் மகனைக் கவனிக்க வேண்டும் டெல்லிக்கு எம்.பியாகச் செல்ல விரும்பவில்லை என்று அவர் சொன்னதே இல்லையே?

மூன்று மாதங்களாக சிறையில் இருக்கும்ராசாவைப் பார்க்க டெல்லிக்குப் போகாத கருணாநிதி, கனிமொழிக்காகப் பதறிக் கொண்டு செல்கிறார். குடும்பம் தான் தனக்கு எல்லாம், குடும்பத்துக் காகத்தான் தன் அரசியல் எல்லாம் என்று திரும்பத் திரும்ப அவர் நிரூபித்துக் கொண்டே இருக்கிறார்.

ஒரு கம்பெனியின் பங்குதாரரை அதன் எல்லா நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக்க முடியாது என்று வாதாடுகிறார் கருணாநிதி. இந்த வாதப்படி அவர் அரசு, சசிகலா மீது ஒரு வழக்கு கூடப் போட்டிருக்கக் கூடாதே? குற்றம் சாட்டப்பட்ட கம்பெனிகளில் அவர் பங்குதாரர் என்ப தால்தானே தி.மு.க அரசு வழக்கு தொடுத்தது?


ஒரு பாவமும் அறியாதவர் கனிமொழி என்றால் ஏன் அவர் ராசாவுக்கு மந்திரி பதவி வேண்டும், அதுவும் டெலிகாம் தான் வேணடும் என்று நீரா ராடியாவிடம் மன்றாடினார்? ஏன் அந்த டேப்புகள் பற்றி கருணாநிதியோ, கனிமொழியோ, வக்கீல் ராம் ஜெதமலானியோ எதுவுமே சொல்வதில்லை?

ஸ்பெக்ட்ரம் ஊழலில் பயனடைந்த டெலிகொம் கம்பெனிகள் ஏன் கனிமொழி இருக்குமிடம் நோக்கியே செல்கின்றன? கனிமொழி பங்குதாரராக இருக்கும் கலைஞர் டி.வி.க்கு கடன் கொடுக்கின்றன. கனிமொழி டிரஸ்டியாக இருந்த தமிழ் மையத்துக்கு நன்கொடைகள் அளிக்கினறன?

ஆனால், கனிமொழி கைதானது பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று நிருபர்கள் கேட்டபோது, உங்கள் வீட்டில் உங்கள் பெண் ஒரு குற்றமும் செய்யா மல் சிறைக்கு அனுப்பப்பட்டால், என்ன மனநிலையில் இருப்பீர்களோ, அதேநிலையில் இருக்கிறேன் என்று தீர்ப்பை எழுதத் தயாராகிறார் கருணாநிதி.

தி.மு.க.வை அழிவின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தியது அவரும் அவர் குடும்பமும்தான் என்றே வரலாறு குறிக்கும். இதிலிருந்து மீள வேண்டுமானால் கருணாநிதி உருவாக்கி வைத்திருக்கும் ஒவ்வொரு மாயையிலிருந்தும் தி.மு.க தொண்டன் விடுபடவேண்டும். ஒவ்வொரு மாயையாகக் கரைந்து கொண்டிருக்கிறது. - ஞாநி

# இராஜதந்திர சேவை திருப்தியில்லை குற்றம் சாட்டுகிறார் விமல் வீரவன்ச



(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் இராஜதந்திரிகள் தமது குடும்ப முன்னேற்றத்தை முன்னிறுத்திச் செயற்படுவதன் காரணமாகவே சர்வதேச மட்டத்தில் இலங்கை குறித்த தவறான பிரச்சாரங்கள் வலுப்படுவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டுகின்றார்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் இருந்து சம்பளம் பெற்றுக் கொள்ளும் பெரும்பாலான இராஜதந்திரிகள் வெளிநாடுகளுக்குச் சென்றவுடன் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி உள்ளிட்ட குடும்ப முன்னேற்றம் கருதிய செயற்பாடுகளுக்கே முதலிடம் கொடுக்கின்றனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டுகின்றார்.

அதன் காரணமாகவே அவர்களால் இலங்கைக்கு ஆதரவான முறையில் சர்வதேச மட்டத்திலான பிரசாரங்களை மேற்கொள்ளவோ அல்லது எதிர்ப் பிரசாரங்களை முறியடிக்கவோ செயலற்றவர்களாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

அதன் காரணமாக வெளிநாடுகளில் புலிகள் உள்ளிட்ட அரசாங்கத்துக்கு எதிரானவர்களின் செயற்பாடுகள் பலமான நிலையை அடைந்துள்ளதாக குறிப்பிடும் அமைச்சர் விமல் வீரவன்ச, அதற்கான ஒரே தீர்வாக இலங்கையின் வெளிநாட்டுச் சேவை முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார்.

ஞாயிறு சிங்களப் பத்திரிகையான லக்பிம இரிதா பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு தலைமைத்துவம்

ஐக்கிய நாடுகளின், ஆசிய பசுபிக் வலைய நாடுகளின் பாதுகாப்பு மகாநாட்டின் தலைமைத்துவம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக சர்வதேச முதலீடுகள் தொடர்பிலான சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இந்த மாநாட்டில் 68 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இம்மகாநாடு கடந்த 24 ஆம் திகதி பாங்கொங்கில் நடைபெற்றுள்ளது. கண்டி கலகெதர பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, அமைச்சர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

## அழுத்தங்களை எதிர்கொள்ள...

கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என ரொபேட் ஓ பிளேக் வலியுறுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் இலங்கை அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கு நிபந்தனை விதிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கையில் காணப்படுகின்ற இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன் வைத்தல் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றவற்றை நடைமுறைப்படுத்தல் என்பனவும் உள்ளடங்குகின்றன.

இது தொடர்பில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

எனினும் அரசாங்கம் அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இதுவரையில் எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியான அழுத்தங்களைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவ்வாறான அழுத்தங்களை எதிர்கொள்வது எப்படி என்பது தொடர்பாக அரசு புதிய வியூகங்களை வகுத்து செயற்படவுள்ளது. இது குறித்தும் இன்று நடைபெறவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் விலாவாரியாக ஆராயப்படவிருக்கிறது.

## சர்வதேச அழுத்தம்....

நாட்டில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை எனவும் அவர் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்து நீண்ட காலம் கடந்து விட்ட நிலையிலும் வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசாங்கம் இன்னமும் நன்மைகளை வழங்கவில்லை. தமிழகத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளும் சலுகைகளும் வடக்கு கிழக்கு மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை.

புலிகளின் காலத்திலும் தமிழ் மக்கள் அழுத்தங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உட்படுத்தப்பட்டே வாழ அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன் காரணமாக அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாகவேனும் நலத் திட்டங்களை வழங்க வேண்டும்.

அதே போன்று மேற்குலக நாடுகளின் முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்து கொள்ளவில்லை. ஆனால் மேற்குலக ஆதரவின்றி அரசாங்கம் மேற்கொள்ளும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி மற்றும் ஆதரவு கிட்டப் போவதில்லை.

இலங்கையில் அனைத்து இன சமூகங்களும் ஒற்றுமையாக வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது. ஆயினும் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டு மக்களை ஐக்கிய படுத்துவதற்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்த போதிலும், அந்த சந்தர்ப்பம் அரசாங்கத்தின் தூரதிருஷ்டியற்ற செயற்பாடுகளினால் கை நழுவி போயுள்ளது.

தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுப்பதற்கு முன்னர் அரசாங்கமாகவே உரிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதிகாரப் பகிர்வு கீழ்மட்ட நிலையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும்.

# ரயில் மோதி இருவர் பலி வவுனியா - தேக்கம்காட்டில் சம்பவம்

(வவுனியா)

அநுராதபுரத்திலிருந்து, வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் மோதியதில் இருவர் உடல் நசிந்து மரணமாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு 11.30 மணியளவில் வவுனியா தேக்கம்காடு - ஆலடியில் நடை பெற்றுள்ளது என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருவரும் ரயில் தண்டவாளத்தில் படுத்திருந்தபோது வேகமாக வந்த ரயில் இவர்கள் மீது மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருவரின் சடலங்களும் பொலிஸாரினால் வவுனியா பொது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இருவரும் தேக்கம்காட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (39)

# இலங்கைக்கு வாருங்கள்; ஜெயலலிதாவுக்கு அழைப்பு



(கொழும்பு)

வடக்கின் தமிழ் மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாட இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அழைப்பொன்றை விடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

வடக்கில் யுத்தம் நிலவிய பிரதேசங்களில் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைக் கேட்டறியவும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அதன் மூலம் இலங்கை அரசாங்கம் தொடர்பான ஜெயலலிதாவின் எதிர்ப்புணர்வுகளைத் தணிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் தமிழ்நாடு மாநிலத்தில் இலங்கை அரசாங்கம் தொடர்பான எதிர்ப்புணர்வுகளைத் தணிப்பதற்கும், அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திரும்பவும் நாட்டுக்கு வரவழைப்பதற்கும் அரசாங்கம் தமிழ்நாடு அரசாங்கத்தின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ளவும் உத்தேசித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அரச ஊழியர்களுக்கு சிங்களம் பயற்சிக்கு சென்றவர்கள் ஏமாற்றம்

(கொழும்பு)

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் யாழ். மாவட்ட அரச ஊழியர்களுக்காக நடத்தும் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் சமூகமளித்தபோதிலும், ஒரு நிலையத்தில் நாற்பது பேர் மட்டுமே இணைத்துக்கொள்ளப் படுவார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமையால் பலரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் 28 ஆம் திகதி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளதால் இதில் கலந்து கொள்ளுமாறு அரச ஊழியர்களை வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் சுற்று நிருபம் மூலம் அறிவுறுத்தியிருந்தது.

இதனால் நேற்று நான்கு இடங்களில் இடம்பெற்ற வகுப்புகளுக்கு பல்வேறு தரங்களிலும் கடமையாற்றும் நூற்றுக் கணக்கான அரச அலுவலர்கள் சென்றிருந்தனர்.

ஆனால் ஏற்பாட்டாளர்கள் கலந்துகொண்டவர்களை எல்லாம் கூட்டமாக மண்டபத்தில் கலந்து கொண்டதை படம் பிடித்துவிட்டு இறுதியில் 2011 ஆம் அண்டில் அரச ஊழியர்களாக நியமனம் பெற்றவர்கள் உட்பட பிந்திய காலத்தில் நியமனம் பெற்ற 40 பேர் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவர் என அறிவித்தனர்.

இதனால் பல நூற்றுக்கணக்கானவர்கள் ஏமாற்றமடைந்து தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர்.

## காணி ஒதுக்கீடு

(கொழும்பு)

அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக கிழக்கு மாகாணத்தின் 10 ஆயிரம் ஏக்கர் காணிப்பரப்பு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கு சொந்தமான கைவிடப்பட்ட காணிகளில் இருந்து இவை தெரிவு செய்யப்பட்டுள்ளது. நட்சத்திர விடுதிகள், கைத் தொழிற்சாலைகள் மற்றும் விவசாய வேலைத்திட்டங்களுக்காக இந்தக் காணி பயன்படுத்தப்படவுள்ளது.

## புதுடில்லி...

ஏனைய கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசவிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக வட்டாரம் தெரிவித்தது.

உள்நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தலைவர்களுடன் பேசவிருப்பதாகவும் அந்த வட்டாரம் தெரிவித்தது.

## முன்னாள்...

செயலாளர் திஸநாயக்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் புனர்வாழ்வு உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, எதிர்வரும் 6 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திலும் ஆயிரம் பேருக்கு 2.5 மில்லியன் ரூபா இலகு கடன் வழங்கப்படவுள்ளது.



# இலங்கை மீது இந்திய ஆதிக்கம்

# நலிவடையும் இலங்கையின் இராஜதந்திரம்

## சீறிப்பாய்கிறது ஜே.வி.பி



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் மீது இந்தியா மிகத் தந்திரமான முறையில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வருவதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டுகின்றார்.

கடந்த காலங்களில் இந்திய-இலங்கை சுதந்திர ஒப்பந்தம் என்ற பெயரில் செய்து கொள்ளப்பட்ட சீபா ஒப்பந்தம், பலாலி விமானத்தள விஸ்தரிப்பு, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி போன்ற செயற்திட்டங்கள் இந்தியாவுக்குத் தாரை வார்க்கப்பட்டமை என்பன அதற்கான சில உதாரணங்களாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

லக்பிம இரிதா சிங்கள வாராந்த பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

அண்மையில்கூட ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் விஜயத்தின் பின் வெளியிடப்பட்டிருந்த கூட்ட றிக்கையில்கூட இந்தியாவின் நலன்கள் தான் உள்ளடக்கப்பட்டி ருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் விரிவாக்கப்பட்டு இந்தியாவுக்கு அதில் நிரந்தர அங்கத்துவம் கிடைக்க வேண்டும் என்றும் அதற்கு இலங்கையின் ஆதரவு வழங்கப்படும் என்பதாகவும் தான் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இந்தியா இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அந்த கூட்டறிக்கையில் ஒரு இடத்தில்கூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அந்த வகையில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் விஜயத்தை இந்தியா தனக்குச் சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டுள்ளது என்றும் அவர் செவ்வியின்போது மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகாதாரமற்ற உணவுகள் பறிமுதல்

(கொழும்பு)

யாழ்.போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்த வடைகள் பொதியுடன் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த சில காலமாக இந்தச் சிற்றுண்டிச் சாலையில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள்கள் இருந்தமை குறித்து சுகாதார பரிசோதகர் எச்சரிக்கை செய்திருந்தார்.

உணவு உற்பத்தி செய்யும் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதி அட்டையை ஒரு வாரத்தினுள் சமர்ப்பிக்கும் படியும் அவர் கூறியிருந்தார்.

இதுவரை அவர்கள் அதைச் சமர்ப்பிக்கவில்லை. இந்த நிலையில் சுகாதார முறைப்படியான பாதுகாப்பற்று அசுத்தமான முறையில் பையினூடாக எண்ணெய் ஊறிய நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் சிற்றுண்டிச்சாலைக்கு விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட வடைகள் அனைத்தையும் யாழ்.போதனா வைத்தியசாலைச் சுகாதாரப் பரிசோதகர் முரளிதரன் கைப்பற்றி அழித்துள்ளார்.

ஏற்கனவே சிற்றுண்டிச்சாலை உணவுகளில் சுகாதாரக் குறைபாடுகள் இருப்பதாக மக்கள் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் அடிப்படைத் தேவைகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை

## சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

யுத்தத்திற்குப் பின்னரும் தமிழ மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், உடனடித் தேவைகள் இன்னமும் நிறைவேற்றப்படாது காணப்படுவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் செயலாளர் டபிள் யூ.எல்.விலேகொட தெரிவித்தார்.

யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மொழிகள் அமுலாக்கத்தில் பல நடவடிக்கைகளை எமது அமைச்சு எடுத்து வருகின்றது. தமிழ் பிரதேசங்களில் ஏற்படுகின்ற மொழிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. சகல பிரதேசங்களிலும் சமூக மேம்பாட்டு அதிகாரிகளாக 200 பேரை நியமிக்கவுள்ளோம். சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனம் கண்டு அதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என்றார்.

இதன்போது வடக்குப் பிரதேசங்களிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களுக்கு நிர்வாக ரீதியாக சிங்கள மொழியில் மாத்திரம் கடிதங்கள் வருவது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், சிங்கள மொழியில் 90 வீதமான கடிதங்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இதற்கு படிப்படியாக தீர்வு காணப்படுமெனவும் கூறினார்.

அரசாங்க திணைக்களங்களில் மொழி அமுலாக்கம் தொடரபில் ஆராய்ந்து தீர்வு காண[illegible]மென்பதுடன், யாழ்.மாவட்ட த[illegible] ஊடகவியலாளர்களுக்கு சிங்கள மொழியைக் கற்பதற்கான வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் இணைப்பாளர் கலாநிதி மோகனும் கலந்துகொண்டார்.

# அவசரகாலச் சட்டம் அகற்றவேண்டாம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து நாட்டின் அவசர காலச் சட்டத்தை நீக்க கூடாது என, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் வசந்த பண்டார இதனை தெரிவித்துள்ளார். இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் இந்தியா சென்றிருந்த போது, அவரால் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இதில் அவசர காலச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது, இலங்கைக்கு இந்தியா வழங்கிய அழுத்தம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுற்றுலா சென்ற மூவர் பலி


(கொழும்பு)

ஓட்டமாவடி சிராஜியா அரபுக் கல்லூரி மாணவர்கள் இருவரும் விடுதி மேற்பார்வையாளர் ஒருவரும் நேற்று குளத்தில் மூழ்கி பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கல்லூரி மாணவர்கள் குழுவொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு பொலனறுவை மட்டக்களப்பு எல்லையிலுள்ள கட்டுவம்புல் எனும் இடத்திற்குச் சென்றிருந்தது. அங்கு குளமொன்றில் குளித்துக்கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. மாணவர் விடுதி மேற்பார்வையாளரான மௌலவி அன்வர் மாணவர்களான றிய[illegible] (15). நௌஷாட் (16) ஆகியோ[illegible] பலியானவர்களாவர். இம்மூவ[illegible]ரின் உடல்களும் மீட்கப்பட்டு பொலனறுவை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

# இனப்பிரச்சினைக்கான பேச்சு முஸ்லிம் காங்கிரஸ் தனித்தரப்பு

## இதுவே கட்சியின் நிலைப்பாடு என்கிறார் தவிசாளர்



(கொழும்பு)

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென்பதே அக்கட்சியின் நிலைப்பாடு என அதன் தவிசாளர் பிரதி அமைச்சர் பீர் சேகுதாவூத் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது,

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசாங்கமும் கூட்டமைப்பும் நடாத்தும் பேச்சுவார்த்தையில் இன்னுமொரு தரப்பாக மு.கவும் பங்குபற்ற வேண்டும் முஸ்லிம் மக்களின் அதிக பட்ச ஆணையைப் பெற்ற மு.கா. அவர்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில் கருமமாற்றும் நாங்கள் அரசில் அங்கம் வகிக்கின்றோமென்ற காரணத்துக்காக எங்களை யாரும் புறந்தள்ளிவிட முடியாது.

முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.கவுடன் இணைந்து பணியாற்றியுள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவின் அரசின் பங்காளியாக விருந்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசில் முன்னரும் அங்கம் வகித்து தற்போதும் இணைந்துள்ளது. அரசுடனான உறவுகளில் திருப்புமுனைகள் ஏற்பட்டபோது முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் ஒரே விதமானவையே. எனவே தனித்தரப்பு என்பது முஸ்லிம் காங்கிரஸின் கோஷமல்ல. ஆனால் தனித்தரப்பு அதாவது பேச்சுவார்த்தையில் இன்னுமொரு தரப்பு என்பது மு.காவின் அடிநாதக் கோரிக்கை. முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளுடன் பின்னிப்பிணைந்த ஒன்று எனவும் அவர் தெளிவு படுத்தினார்.

நாங்கள் அரசில் அங்கம் வகிக்கின்றோமென்பது பிரச்சினையல்ல. பேச்சுவார்த்தையில் எமது மக்களின் அபிலாஷைகளை எடுத்துக் கூறி அவர்களின் உரிமைகளை காக்கவேண்டும். அரசுடன் தமிழ்க் கூட்டமைப்பு நம்பிக்கையுடன் பேச்சில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

எனினும் இந்தப் பேச்சுக்களில் மு.காவும் பங்கேற்பதே கூட்டமைப்புக்கும் நல்லது. அரசுக்கும் நல்லது. அத்துடன் இனப் பிரச்சினைத் தீர்விலும் நம்பிக்கையான மாற்றம் கிடைக்கும் எனவும் பீர் சேகுதாவூத் குறிப்பிட்டார்.

# தனியார் வைத்தியசாலைகளை சுகாதார அமைச்சு கட்டுப்படுத்துமா?

## விரைவில் வருகிறது புதிய சட்டம்

தனியார் வைத்திய நிறுவனங்களை நிருவகிப்பதற்கான அதிகாரங்களை, சுகாதார அமைச்சுக்கு வழங்கும் வகையில், தனியார் வைத்திய நிறுவன சட்ட மூலம் சீரமைக்கப்படவுள்ளது.

அண்மையில் சுகாதார அமைச்சின் கொள்கை வகுப்பு கூட்டத்தின் போது, இது தொடர்பில் சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுளளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வைத்திய நிறுவனங்களை நிருவகிக்கும் அதிகாரம் சுகாதார அமைச்சிடம் இல்லை.

இந்த நிலையில் சட்ட மூலத்தை உடனடியாக சீரமைப்பது தொடர்பில் சட்டத்தரணி கருணாதாஸ ஹெட்டி ஆராச்சி தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழு சீரமைப்பு தொடர் பிலான கருத்துக்களை ஆலோசித்துவருகிறது.

### இரத்தினக் கல் தோண்டிய ஐந்து பேர் கைது

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ள நிலையில் அங்கு இரத்தினக்கல் தோண்டிய குற்றச்சாட்டில் 5 பேர் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இந்நபர்கள் அவர்களின் கருவிகளுடன் நோர்வூட் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இந்நீர்த் தேக்கத்தின் நீர்மட்டம் அதன் உச்ச அளவைவிட 55 அடி குறைவடைந்துள்ள நிலையில் சிலர் அங்கு சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடபட முயற்சிக்கின்றனர்.

# வடக்கில் மீள்குடியமர்வு 95 சதவீதம் பூர்த்தி

(கொழும்பு)

வடக்கின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுள் 95 சதவீதமானவை பூர்த்தி அடைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மீள்குடியேற்றத் துறை அமைச்சின் செயலாளர் பிம்.எம். யு.டீ பஸ்நாயக்க இதனை தெரிவித்துள்ளார். எதிர்வரும் இரண்டு மாதங்களில் வடக்கின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை முழுமைப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில், மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.